Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்து கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்

பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்



சொலெக்ஸ் மூக்கு கண்ணாடியகம்
516 ஆஸ்பத்திரி வீதி
O.P.D முன்பாக
யாழ்ப்பாணம்

Tel.Phone: 077-855328

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 04 (20.09.2004) திங்கட்கிழமை இதழ்:356

### சமாதான முயற்சிகள் குறித்து

# உயர்மட்டக் கலந்துரையாடலுக்கு புலிகளின் குழு ஐரோப்பா செல்லும்

(கிளிநொச்சி)

**சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடல் நடத்துவதற்காக விடுதலைப்புலிகளின் குழுவொன்று இம்மாத இறுதியில் ஐரோப்பாவுக்கு பயணமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து உயர் மட்டக் கலந்து ரையாடல்களை நடத்தவே புலிகளின் குழு ஐரோப்பா செல்லவுள்ளதாக தெரியவருகிறது.**

அத்துடன், புலிகளின் இந்தக் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள், சுவீடன் மற்றும் ஜேர்மனியிலுள்ள மனித உரிமைக் குழுக்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

மேலும், நோர்வேயில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், இலங்கைக்கான சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரையும் புலிகளின் குழு சந்தித்து பேசவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்தவாரம் நான்கு நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த எரிக் சொல்ஹெய்ம், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகளில் தோல்வி கண்ட நிலையில் நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் சொல்ஹெய்ம் புதுடெல்லிக்குச் சென்றுள்ளார். இலங்கையில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு அப்பேச்சுக்களின் பலாபலன்களை இந்திய அதிகாரிகளுக்கு விளக்குவதற்காகவே அவர் நேற்றுமுன்தினம் மாலை புதுடெல்கி புறப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு விஜயத்தை மேற்கொண்ட சொல்ஹெய்ம் - கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களுக்குச் சென்று அரசுத்தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடல்களின் பெறுபேறுகள் தொடர்பாக இந்தியத் தரப்புக்கு விளக்குவதற்காகவே நேற்றுமுன்தினம் மாலை அவர் கொழும்பில் இருந்து புதுடெல்கி புறப்பட்டார்.

கலந்துரையாடல்கள் பயனளிப்பவையாக இருந்தன. ஆனால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லையே என்று புதுடெல்கி புறப்படமுன்னர் செய்தியாளர்களுக்கு அவர் கருத்து வெளியிட்டார்.

# மார்ச்சில் தேர்தல் நடந்தால் எதிர்கொள்வதற்குத் தயார்!

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக அந்தக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பொல்காவலையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் புனரமைப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தற்போது நாம் கட்சியை மீள் புனரமைப்புச் செய்து வருகின்றோம். இந்த நிலையில் அடுத்த வருடம் மார்ச் மாதம் தேர்தல் நடைபெற்றால் அதனை ஐ.தே.க எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளது.

அடுத்த வருடம் மார்ச் மாத முடிவில் நடைபெறவுள்ள தேர்தலில் நாம் வென்று தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்போம். அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஸ்திரமான அரசொன்றை அமைக்கும்.

அத்துடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்கா, ஜப்பானில் பாதுகாப்பு மாநாடுகள்!

### விமானப்படைத் தளபதி பங்கேற்பார்

(கொழும்பு)

ஜப்பானிலும் அமெரிக்காவிலும் நடைபெறவுள்ள பாதுகாப்புத் தொடர்பான சர்வதேச மாநாடுகளில் இலங்கையின் சார்பில் விமானப் படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா கந்துகொள்ள விருப்பதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்புக் குறித்த உயர் மட்ட படையதிகாரிகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் விமானப் படைத்

இதே வேளை அமெரிக்காவிலும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள பாதுகாப்புத்துறை சார்ந்த மாநாட்டிலும் இவரே பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த மாநாட்டில் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பாதுகாப்புக் குறித்த விவகாரங்கள் தொடர்பாக வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் விமானப் படைதளபதி பேச்சுக்களை நடத்துவார்

### பொதுநலவாய நாடுகளிடம்

# புலிகளை தடைசெய்யுமாறு ஹெலஉறுமய கோரிக்கை!

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்ய வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

தற்போது கனடாவில் நடைபெறும் பொதுநலவாய நாடாளுமன்ற சங்க கூட்டத்தில் பங்கேற்கும் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மாத்திரமே இலங்கைக்கு நிதியுத்வி வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டையும் பொதுநலவாய நாடுகள் விலக்கிக்கொள்ள வேண்டும் என அவர் கேட்கவுள்ளதாக, ஜாதிக ஹெல உறுமய வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நிலையில் நேற்று இத்தாலி நாட்டில் ஜாதிக ஹெல உறுமய மாநாடு ஒன்றை நடத்தியது இதுவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாநாடாகவே அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல் தான் நாளைய எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும். வருத்தப்படும்.**

**– தியாகி லெப்.கேணல் திலீபன்**



# விமானப்படைத் தளபதி பங்கேற்பார்

(கொழும்பு)

ஜப்பானிலும் அமெரிக்காவிலும் நடைபெறவுள்ள பாதுகாப்புத் தொடர்பான சர்வதேச மாநாடுகளில் இலங்கையின் சார்பில் விமானப் படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா கந்துகொள்ள விருப்பதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்புக் குறித்த உயர் மட்ட படையதிகாரிகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் விமானப் படைத் தளபதி எயார் வைஸ்மார்சல் டொனால்ட் பெரேரா கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அமெரிக்காவிலும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள பாதுகாப்புத்துறை சார்ந்த மாநாட்டிலும் இவரே பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த மாநாட்டில் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பாதுகாப்புக் குறித்த விவகாரங்கள் தொடர்பாக வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் விமானப் படைதளபதி பேச்சுக்களை நடத்துவார் என்றும் கூறப்படுகிறது. (01)

பொதுநலவாய நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்ய வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

தற்போது கனடாவில் நடைபெறும் பொதுநலவாய நாடாளுமன்ற சங்க கூட்டத்தில் பங்கேற்கும் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மாத்திரமே இலங்கைக்கு நிதியுத்வி வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டையும் பொதுநலவாய நாடுகள் விலக்கிக்கொள்ள வேண்டும் என அவர் கேட்கவுள்ளதாக, ஜாதிக ஹெல உறுமய வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நிலையில் நேற்று இத்தாலி நாட்டில் ஜாதிக ஹெல உறுமய மாநாடு ஒன்றை நடத்தியது இதுவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாநாடாகவே அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல் தான் நாளைய எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும். வருத்தப்படும்.**

**– தியாகி லெப்.கேணல் திலீபன்**



## புலிகளின் சீருடை வைத்திருந்த மூன்று இளைஞர்கள் கைது!

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் சீருடையை வைத்திருந்ததாக தெரிவித்து மூன்று தமிழ் இளைஞர்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினர் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் காலை 8.40 மணியளவில் - ஓமந்தை சோதனைச் சாவடியூடாக செல்ல முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். மூதூர் மல்லிகைத்தோட்டத்தைச் சேர்ந்த 24 வயதான செம்பகுட்டி விஜயராசா, சம்பூரைச் சேர்ந்த 28 வயதான காளிதாஸ் ரவீந்திரன், மூதூர் கடற்கரை சேனையைச் சேர்ந்த தர்மலிங்கம் தயாகரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட இவர்களை தாம் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக படைத்தரப்பு தெரிவித்தது.

இவர்கள் மூவரும் நேற்று மாலை வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினூடாக தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதானத்துக்கு எதிரான கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்து வருகிறார்!

## புலிகளின் சமாதான செயலகம் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி சந்திரிகா, தற்போது இதற்கெதிரான கருத்தை முன்வைத்து வருவதாக தமிழீழ விடுலைப் புலிகளின் சமாதானச் செயலகம் குற்றம் சாட்டியுள்ளது.

தற்போதைய சமாதான இழுபறி நிலை தொடர்பாக சமாதானச் செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களுக்கு -

தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுப்பில்லாமல் செய்ற்பட்டு வருவதாகவும்,

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானம் தொடர்பாக ஒரு தீர்மானம் இல்லாமல் இருப்பதாகவும், ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளமை தமிழ்மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. இந்த யோசனையின் அடிப்படையில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருந்தார்.

அந்தவேளை இடைக்கால நிர்வாக யோசனையில் அடிப்டையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகத் தெரிவித்தே சந்திரிகா தலைமையிலான ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைக்குத் தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்தே வந்தது.

இந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த சந்திரிகா, தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நேரத்துக்கு நேரம் மாறி மாறி கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

நிரந்தர அரசியல் தீர்விற்கான ஆரம்பகட்ட அரசியல் செயற்பாட்டிற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை கையளிக்கப்பட்டது.

அந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்க சந்திரிகா அரசு தற்போது இழுத்தடிப்புச் செய்வதற்காக பல்வேறு முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...








தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் 82 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நேற்று தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களை முதலாவது படத்திலும், நிகழ்விற்கு வருகைதந்த அரச அதிபர் மற்றும் பிரமுகர்கள் வரவேற்கப்படுவதை அடுத்த இரு படங்களிலும், நீண்டகாலம் கூட்டுறவுப் பணியில் ஈடுபட்டோர்க்கு விருது வழங்கும் நிகழ்வுகளை ஏனைய படங்களிலும் காணலாம்.

## சிறுவர் நாடகப் போட்டியில் திரு இருதயக் கல்லூரி 2 ஆம் இடம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நல்வாழ்வு நாடகப் போட்டியில் கரவெட்டி திரு இருதய நவோதயப் பாடசாலை பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டி கோட்ட, வலய, மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போது இந்தப் பாடசாலை கோட்டத்திலும், வலயத்திலும் முதலாமிடம் பெற்றது.

அண்மையில் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியிலும் கீழ்ப்பிரிவு மாணவர்களின் நாடகம் கோட்ட, வலய மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (13)

## இலசவ மாலைநேர வகுப்பு

கைதடி - நாவற்குழி பாடசாலை வீதி பாரதி சனசமூக நிலையத்தில் இலவச மாலைநேர வகுப்பு நடைபெற்று வருகின்றது.

இந்தக் கிராமத்தில் பிறந்து வெளிநாட்டில் வசித்து வரும் நலன் விரும்பியின் நிதியுதவியுடன், சனசமூக நிலையமும் இணைந்து மாலை நேரத்தில் இலவச வகுப்பு நடைபெற்று வருகின்றது.

மேற்படி கிராம பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்தே மாணவர்களுக்கு இலவசக் கல்வி ஊட்டி வருவது குறிப்படத்தக்கது. (63)

## நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கு வாளி

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு யாழ். செயலகத்தால் வாளிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிக்கை யாழ். செயலகத்திலிருந்து ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து இதற்கான விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விபரங்களில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார்.

## கணித விஞ்ஞான போட்டிகளில் வடமராட்சி வலயம் முன்னணி

மாகாண மட்ட கணித - விஞ்ஞானப் போட்டிகளில் வடமராட்சி வலயம் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

24 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்ட இந்தப் போட்டிகளில் - தமிழ் மொழி மூல போட்டிகளில் பங்குபற்றிய இரு மாணவர்கள் முதலாம் இடத்தையும், இரண்டு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றதோடு, ஆங்கில மொழி மூல போட்டியில் பங்குபற்றிய இருவர் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (122)


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

ஆட்டாமா, வறுத்தமா, சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, கோதுமை குறுணல் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில் அன்ஸ்ரோர்ஸ், இல 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C/3022)

நிறைஞ்சனாஸ் சங்கானை

கமல், சினேகா, பிரபு நடித்த வசூல்ராஜா MBBS



வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Return to two moon junction

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

தனுஸ், சிந்துலானி, கருணாஸ் மற்றும் மணிவண்ணன் நடித்த

23 ஆம் திகதி முதல் மதுர



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2725)

## மணமகள் தேவை

கனடா குடியுரிமையுடைய தற்போது விடுமுறையில் இலங்கை வந்திருக்கும் மகனுக்கு தாயார் மணமகளை தேடுகின்றார்.

**மகனின் விபரம்**

வயது - 32 (1972.08.09)
சமயம் - றோமன் கத்தோலிக்கம் (R.C)
உயரம் - 5'3''
இனம் - கொழும்பு செட்டிக் குடும்பம்
கல்வித்தகமை - I) Chartred Accountant
II) Certified public Accountant of USA (CPA)
III) Certified General Accounts (GCA)
தொழில் செய்யும் இடம் - TRONTO Canada
குறிப்பு - படித்த பெண்ணாக இருத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு

S.BASHAR
No. 116/5 BENADICT MAWATTA
KOTAHENA, COLOMBO 13.

T.P - 0112 343358


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கயித்தாம்பிள்ளை இருதயராசா
(விஜயன்)

விண்ணில் 24.01.2004 மண்ணில் 07.08.2004

குடும்பத்தின் குத்து விளக்காய்
குடை சாய்ந்து வீழ்ந்ததேனோ
பதுங்கி இருந்து தாக்கிய கல் வீச்சு
உன் உயிரைக் குடித்ததோ
பாசத்தின் உறைவிடமே – நண்பா
நீ! பாதியில் அணைந்தாயோ
சிரித்து சிரித்து பேசிய சிங்கார நண்பா
சிட்டாய் மறைந்த மாயமென்ன
கழகத்தின் மகிமை காக்க
மண்ணில் மறைந்தாயோ – நண்பா
உன் அருமைச் செய்தியை ஊரே நம்பவில்லை
பவனியில் நான் கதறும் காட்சியை
காண வந்தால் உனக்கு – நண்பா
மௌன உறக்கம் கலைத்து – நீ
மௌன உறக்கம் கொண்டாயோ நண்பா!

இவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (C/3164)

இவரின் பிரிவால் துயருறும்
சென்சேவியர் விளையாட்டுக் கழகம், புங்குடுதீவு.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.வணிகர் கழகத்தின் மூத்த உறுப்பினரும் முன்னாள் தலைவரும் தற்போதைய உப செயலாளரும், யாழ்ப்பாணம் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

### விஸ்வலிங்கம் குலரத்தினம்

அவர்கள் 17.09.2004 அன்று காலமானதையிட்டு யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த துக்கத்தினை அனைத்து வணிகர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் ஸ்தாபன ஊழியர்களுக்கும் எமது மிகுந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனை அனைவரும் வேண்டுவோமாக.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி-3163)

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் - 2005



வட இ.ச.சபையின் 2005 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 2004.09.20 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 2004.12.01 விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது (30) மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால்மூலம் பெற விரும்புவோர் ரூபா 30/- பெறுமதியான காசுக் கட்டளையை (மணி ஓடர்) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ.மீ, 22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்
வட இலங்கை சங்கீத சபை,
யாழ்.கல்வி வலயம்
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-3159)

# கனேடிய பொங்கு தமிழ் நிகழ்வை இனவாத ஊடகங்கள் குழப்ப முயற்சி!

கனடாவில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வைக் குழப்பும் நோக்கில் இனவாத ஊடகங்கள் தீவிரப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

கனேடிய பொங்குதமிழ் நிகழ்வு நிறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதாக, உண்மைக்குப் புறம்பான செய்தியொன்று வெளியாகியுள்ளது.

மிகுந்த எழுச்சியுடன் ரொறன்ரோ நகரில் பெரும் எடுப்பில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளால் குழப்படைந்துள்ள இனவாத ஊடகங்கள், கடந்த சில வாரங்களாக எடுத்து வந்த மிகவேகமான முயற்சிகள் எதுவும் பலிக்காத நிலையில், எப்படியும் அதைக் குழப்புவதற்கான இறுதி முயற்சியாக உண்மைக்குப் புறம்பான செய்திகளைப்பரப்ப ஆரம்பித்துள்ளன.

அரசின் நிதியுதவியுடன் அமெரிக்காவிலிருந்து இயங்கும் அக்கடமிக் என்ற இனவாத இணையத்தளம், வழமைபோன்று இந்த முயற்சியில் ஈடுபட்டு தோல்வி கண்டுள்ளது.

கனேடியப் பாதுகாப்பு அமைச்சின் தகவலெதுவும் வெளியாகாத நிலையில், பாதுகாப்பு அமைச்சின் தகவலின்படி, பொங்குதமிழ் நிறுத்தப்படவுள்ளதாக உண்மைக்குப் புறம்பான செய்தியொன்றை வெளியிட்டுள்ள இந்த இனவாத இணையத்தளம், அத்தகவலைத் தங்களால் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை என்றும் குறிப்பிட்டு, தங்களது கையாலாகாத் தனத்தையும் நிரூபித்துள்ளது.

ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டபடி, பொங்குதமிழ் நிகழ்வுகள் கனேடிய மண்ணின் தமிழர் நகரமும், உலகின் அழகிய பிரதேசமுமான ரொறன்ரோ மண்ணில் அமைந்துள்ள ராணி பூங்காவில் மிக எழுச்சியுடன் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், ரொறன்ரோ பெருநகரில் வாழும் அத்தனை தமிழர்களும் தங்கள் தமிழுணர்வை இந்த நிகழ்வின்போது வெளிப்படுத்தவுள்ளதாகவும் கனேடியத் தகவல்கள் தெரிவித்தன.

கனடாவில் வாழும் தமிழர்களை, தமிழுணர்வற்ற தமிழர்கள் என்று பிரச்சாரம் செய்ய முற்படும் சிங்கள இனவாத ஊடகங்களின் பிரசாரத்தை முறியடிக்க கனேடியத் தமிழர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகக் கனேடியச் செய்திகள் தெரிவித்தன.




# செயற்றிட்டங்களுக்கு உதவி ஒபெக் அமைப்பு உறுதி!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்களுக்கு குறிப்பிட்டளவு நிதியுதவியை வழங்க ஒபெக் அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக, நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஒஸ்ரியாவிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய நிதி அமைச்சர் - விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த நிதி அமைச்சர்-

ஒபெக் அமைப்பும் ஒஸ்ரிய அரசாங்கமும் இணைந்து சில செயற்றிட்டங்களைப் பொறுப்பேற்றுள்ளன.

இதன்போது ஜேர்மன் நிதி அமைச்சருடனும் பேச்சுக்கள் நடத்தினோம்.

275 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஜேர்மன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இவை மத்திய மற்றும் முழு அளவிலான செயற்றிட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என மேலும் தெரிவித்தார்.

# லெப்.கேணல் இரும்பொறையின் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வு!

கடற்புலிகளின் முன்னாள் துணைத் தளபதி லெப்.கேணல் இரும்பொறையின் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வும், கடற்புலிகள் பயிற்சிப் பள்ளியின் விளையாட்டு நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

பயிற்சி ஆசிரியர் நிலவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை கடற்புலிப் போராளி மோகன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்ததுடன், சிறப்புரையையும் ஆற்றினார்.

லெப்.கேணல் இரும்பொறையின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரை கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் ஏற்றிவைக்க, மலர்மாலையை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் அணிவித்தார்.

தொடர்ந்து லெப்.கேணல் இரும்பொறை கடற்படைப் பயிற்சிப் பள்ளியின் கடல், தரை விளையாட்டு நிகழ்வில் பங்குகொண்டு வெற்றியீட்டிய போராளிகளின் பரிசில்கள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டன.

# இடைக்கால நிர்வாகம் குறித்து சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த இடதுசாரிக்கட்சிகள் உதவி!

தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் தெளிவை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள இடதுசாரிக் கட்சிகளின் உதவியை நாடியுள்ளது.

இதனடிப்படையில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற்றும் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரின் உதவி பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையைத் தான் ஏற்றுக்கொண்டுள்ளதாக கலாநிதி விக்கிரமபாகு கருணா ரட்ண தெரிவித்தார். (01)

# எமது மக்கள் தமிழீழ காவல்துறை மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர்!

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறை மீது எமது மக்கள் முழுமையான நம்பிக்கையை வைத்துள்ளனர். வடக்குக் கிழக்கின் பல பகுதிகள் சட்டம் ஒழுங்கு நிலையை ஏற்படுத்துவதில் தமிழீழ காவல்துறை வெற்றி கண்டிருக்கிறது.

இதனால், தமிழீழ காவல்துறையினரிடம் சட்டம், ஒழுங்கு பேணப்படும் அதிகாரம் இருப்பதை, பொது மக்கள் பாதுகாப்பானது எனக் கருதுகின்றனர் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் தெரிவித்தார்.

தமிழ்நெற் இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது -

தமிழீழ காவல்துறை சட்டம், ஒழுங்கை பேணும் நடவடிக்கையில் மட்டும் ஈடுபடவில்லை, தமிழ் மக்களின் பொதுவான நலன்புரி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

தமிழீழ காவல்துறையின் செயற்பாடு குறித்து நடாளுமன்றத்தில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டி வருகிறோம்.

எமது வெற்றிகரமான செயற்பாட்டுக்கு எமது தலைமைத்துவம் தான் காரணம். தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்ட பின்னர் பல தடவைகள் இதன் செயற்பாடு குறித்து தலைவர் ஆலோசனை வழங்கி வருகிறார்.

காவல்துறையின் உச்சக் கட்டச் செயற்பாடாக - அரச படைகளுக்கு எதிரான போர் நடவடிக்கையில் ஈடுபட்டமையைக் குறிப்பிடலாம்.

நாம் காவல்துறைக்க ஆட்களை பொது மக்களில் இருந்துதான் தெரிவு செய்து கொண்டோம். அவர்களுக்கு வகுப்புகள் மூலம் சிறப்பாக செயற்படுவது குறித்து பயிற்சி வழங்குகிறோம்.

ஏ 9 வீதி திறக்கப்பட்ட பின்னர் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் போக்குவரத்து அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வீதி விபத்துக்களும் உயர்ந்தது. இதனால் போக்குவரத்து நெருக்கடிகளையும், வீதி விபத்துக்களையும் குறைப்பதற்கான நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறோம்.

எமது மக்களுக்கு வீதிப் பாதுகாப்பு விதிகள் குறித்த விளக்கங்களை வழங்கி வருகிறோம். எமது மக்களுக்கு வீதிப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி எமது தலைவர் வே.பிரபாகரன் ஆலோசனை கூறியிருந்தார்.

மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச நிறுவனங்களான, யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம்.



மட்டக்களப்பில் கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் காவல் பணிமனைகள் திறக்கப்பட்டு, இயங்கி வருகின்றன. மூன்றாவது காவல் நிலையம் விரைவில் திறக்கப்படும்.

மட்டக்களப்பில் 5காவல் நிலையங்களை அமைக்கும் திட்டமும் உண்டு.

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிவரும் சம்பூர் காவல் பணிமனைக்கு மேலதிகமாக இன்னொரு பணிமனை விரைவில் திறக்கவிருக்கிறோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எமதுகாவல் நிலையங்களை நாடுவது அதிகரித்து வருகின்றது. இதனால், காவல் நிலையங்களையும், காவற்றுறையினரின் தொகையையும் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.

தென் பகுதி மக்கள், தமது இலங்கையில் இரண்டு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்ததே தமது அடிப்படை உரிமைகளை பாதுகாத்துக் கொண்டு அமைதியாக வாழ்வதற்குத்தான்.

இந்த விடுதலைப் போராட்டத்தில் மூலமே தமிழீழ காவல்துறை, தமிழீழ நீதிமன்றங்கள் என்பன தோற்றம் பெற்றன.

விடுதலைப் போராட்டத்துக்கு உதவும் வகையில் - தேசிய துணைப் படை வீரர்களை நாம் எல்லைப் புறப் பாதுகாப்பிற்காக திரட்டி வருகிறோம் என பா.நடேசன் மேலும் தெரிவித்தார்.

# கன்னியா பிரதேசத்தில் மீண்டும் காவலரண் அமைப்பதற்கு முயற்சி!

திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் இராணுவத்தினர் மற்றொரு காவலரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு வேண்டிய காட்டு மரங்கள் வெட்டப்பட்டு கன்னியா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளவில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காவலரண் பெரும்பாலும் இந்தப் பாடசாலைக்கு அருகாமையில் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இரு வாரங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் மற்றொரு காவலரண் அமைக்கப்பட்டு அங்கு இராணுவத்தினர் கடமைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் டெனிஷ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கை மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதோடு, அச் சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மழைகாலம் நெருங்கி வரும் இந்த வேளையில் இரவுப் பொழுதில் காட்டு யானைகள் ஊருக்கு வருகின்றன. இதுபோன்று இராணுவத்திற்கும் ஊருக்குள் வருவதற்கு முயற்சி எடுப்பதாக பிரதேச வாசி ஒரு வர் கருத்துத் தெரிவித்தார். (04)



வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்திய நாட்டுக்கூத்து விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது. இசை நடகத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் அருணோதயாக் கல்லூரி பொறுப்பாசிரியர் சான்றிதழை கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு பணிப்பாளர் ந.நடராசாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும், உடுவில் மத்திய கல்லூரி இசை நாடகத்தில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம். (படம் சி.சசிகுமார்)

# அமெரிக்க பணியாளர்களின் சேவை நேபாளத்தில் இடைநிறுத்தப்பட்டது!

நேபாளத்தில் கடமையாற்றிய அமெரிக்கத் தொண்டர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இதற்கு அவர்கள் பணிபுரிந்த தொண்டு நிறுவனங்கள் அங்கு தமது சேவையை இடைநிறுத்தியமையே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 84 தொண்டர்கள் நேபாளத்தில் பணிபுரிந்ததாகவும் இவர்கள் அனைவரும் அமெரிக்க அரசின் உத்தரவுக்கமைய தமது பணிகளை நிறுத்தி வெளியேறுவதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சமாதானத் தொண்டர்கள் நேபாளத்தில் சுகாதாரம், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள், ஆசிரியத் தொழில், நீர் விநியோகம் மற்றும் வனவளப் பாதுகாப்பு போன்ற பணிகளில் ஈடுபட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பணியாற்றிய நிறுவனங்களும், இவர்களும் தமது பணிகளை நேபாளத்தில் இடைநிறுத்துவதற்கு அங்குள்ள பாதுகாப்பற்ற நிலையே காரணமென இவர்கள் தெரிவித்தனர்.

நேபாளத்திலிருந்து தமது பணிகளை இடைநிறுத்தி வெளியேறுவதென்பது மிகவும் துக்ககரமான நிகழ்வென தொண்டர் நிறுவனப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன், நேபாளத்திலிருந்து வெளியேறும் பணியாளர்கள் அனைவரும் பாங்ஹொக் மற்றும் தாய்லாந்திற்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதேவேளை - கடந்த வாரம் நேபாளத்தில் அமைந்துள்ள அமெ



ரிக்க தகவல் தொடர்பு நிலையமொன்று குண்டு வெடிப்புக்கு இலக்கானது. இதில் எவரும் காயமடையவில்லை. இந்தத் தாக்குதலை மாவோ கிளர்ச்சிவாதிகளே நடத்தினரென குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ஆனாலும், இந்தத் தாக்குதலைத் தாமே நடத்தியதென கிளர்ச்சிவாதிகள் உரிமைகோரவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

# கஸகஸ்தான் ஜனாதிபதியின் மகள் தந்தையை எதிர்த்து தேர்தலில் போட்டி

(மொஸ்கோ)

ரஷ்யாவிலிருந்து பிரிந்த கஸகஸ்தான் நாட்டின் அதிபராக இருப்பவர் 64 வயதான நசர்பயேவ். இவர் அந்த நாட்டில் செல்வாக்கு மிகுந்த தலைவராக இருக்கிறார். அத்துடன் ஒடன் (தந்தையார், நாகு) கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். இவர் அடுத்த 9 ஆண்டுகளுக்கு ஆட்சியிலிருந்து விலகுவதாக இல்லை.

இந்த நிலையில் அவரது மூத்த மகள் நூர் சுல்தான் அரசியலில் குதித்துள்ளார். 41 வயதான இவர் பத்திரிகை அதிபராகவும், பாடகியாகவும், 3 குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கிறார். 'அசர்' (எல்லோரும் சேர்ந்து) என்ற பெயரில் கட்சி தொடங்கியிருக்கும் இவர் நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான இடங்களைக் கைப்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தந்தையை எதிர்த்து மகள் போட்டியிடுகிறார்.

என் தந்தையைச் சுற்றியிருக்கும் கும்பலால் அவருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுவருகிறது. சீர்திருத்தம் வேகமாக நடைபெறாமல் தடுப்பதே இந்தக் கும்பல்தான். இந்தக் கும்பலுக்கு அதிர்ச்சி தருவதற்காகத்தான் நான் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்று நூர் சுல்தான் கூறினார்.

தேர்தலில் போட்டியிடுவதென்பது சிரமமான வேலை. இதனால் உனக்கு லாபம் எதுவும் கிடைக்காது என்றுகூறி என்னப்பா என்னைத் தடுக்கப்பார்த்தார். அதற்கு நான் சம்மதிக்கவில்லை. என்று சுல்தான் தெரிவித்தார்.

# பின்லேடன் எங்குள்ளாரென்பது முஷாரப்புக்குத் தெரியாதாம்!

அல் - கொய்டா இயக்க தலைவர் பின்லேடன் எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பிஓடி பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இருக்கும் மலைப்பகுதியில் பதுங்கி வாழவதாக தகவல்கள் வருகின்றன.

இதனால் அந்தப்பகுதியில் பாகிஸ்தான் படையினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அல்கொய்டா இயக்கத்தைச் சேர்ந்த பலரைக்கைது செய்துமுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர்மாதம் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் ஜோர்ஜ்புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். அதனால் தேர்தலுக்கு முன்பே பின்லேடனைப் பிடித்துவிட வேண்டும் என்பதில் ஜோர்ஜ் புஷ் உறுதியாக இருப்பதாகவும் இதற்கு பகிஸ்தான் உறுதுணையாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் 6 நாள் சுற்றுப் பயணமாக பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். இதற்கு முன்னர் முஷாரப் பாகிஸ்தான் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு சிறப்புப் பேட்டியளித்தார்.

இந்தப் பேட்டியின்போது முஷாரப்பிடம் - பின்லேடனைப் பிடித்து ஜோர்ஜ் புஷ்சுக்கு தேர்தல் பிரசார பரிசாக வழங்கப்போவதாக கூறப்பட்டதே என்று கேட்கப்பட்டது.

இதற்கு முஷாரப் பதில் அளிக்கையில் அப்படி ஒரு கூற்று நிலவியது. நான் அப்படி கூறவில்லை பின்லேடன் எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்கு தெரியாது என்று கூறினார்.




# லித்வேனியாவில் நடத்தப்பட்ட செச்சினிய கிளர்ச்சிவாதிகளின் இணையத்தளம் தடைசெய்யப்பட்டது




லித்வேனிய நாட்டிலிருந்து செச்சினிய கிளர்ச்சிவாதிகள் தொடர்பான தகவல்களை தெரிவித்துவந்த இணையத்தளமொன்றை தற்காலிகமாக லித்வேனிய அரசாங்கம் தடைசெய்துள்ளது.

இந்த இணையத்தளம் செச்சினிய தீவிரவாதிகளால் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் ரஷ்யாவின் ஒசெஸ்ரியா மாகாணத்தில் பாடசாலையொன்றில் மாணவர்கள் மற்றும் பெற்றோர் என ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைத் தாமே பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்ததாக இந்த இணையத்தளம் மூலம் செச்சினிய கிளர்ச்சிவாதிகள் உரிமை கோரியிருந்தனர்.

ரஷ்யாவுக்கான லித்வேனியத் தூதுவர், ரஷ்ய வெளிவிவகார அமைச்சினால் அழைக்கப்பட்டு - லித்வேனியாவில் இயங்கும் குறித்த இணையத்தளத்தை தடைசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லித்வேனிய தலைநகரில் இயங்கும் இந்த இணையத்தளத்தை அந்த நாட்டு பாதுகாப்புத் திணைக்களமே தடைசெய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த லித்வேனிய பாதுகாப்புத் திணைக்களப் பேச்சாளர் - லித்வேனிய நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய இந்த இணையத்தளம் தடைசெயயப்படுகிறது. அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த லித்வேனிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அந்நாட்டுப் பிரதமர் எமது நாட்டின் சட்டங்கள் பயங்கரவாதிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு எப்பொழுதும் இடமளிக்கமாட்டாது. எனவே இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நாம் சட்டநடவடிக்கை எடுப்போம்.

எனவே, அந்த வகையிலேயே இந்த இணையத் தளமும் தடை செய்யப்படுகின்றதெனத் தெரிவித்தார்.

# மாகாண மட்ட தமிழ் மொழித்தினம் – 2004 போட்டி முடிவுகள்

| போட்டியாளர் பெயர் | பாடசாலை |
|---|---|
| **வாசிப்பு 1** | |
| 1 த.கோகுலன் | யா.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் |
| 2 எம்.எச்.ஹமேசா ஜனா | கமு. அல்-மனார் மத்திய கல்லூரி |
| 3 ப.கிசோஜி | வ.சீ.சீ.ரி.எம்.எஸ்.பாடசாலை |
| **வாசிப்பு 2** | |
| 1 பொ.நிருபிதா | வ.விபுலானந்த மகா வித்தியாலயம் |
| 2 யு.எல்.நழிபா | கமு.அஸ்-ஸிராஜ் மகா வித்தியாலயம் |
| 3 த.லாவண்யா | தி.ஸ்ரீ.சண்முகா இந்து மகளிர் கல்லூரி |
| 3 வி.யஸ்ரிகா | கிளி.புனித திரேசா வித்தியாலயம் |
| **ஆக்கத்திறன் வெளிப்பாடு 1** | |
| 1 யு.எல்.மினித் பாரத் | கமு. இராமகிருஷ்ணன் மிசன் வித்தியாலயம் |
| 2 சதானந்தன் ஜந் | மட் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் |
| 3 காஜா ரோகணன் சௌஜா | யா.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை |
| **ஆக்கம் எழுத்து 1** | |
| 1 த.அபிநயா | யா.சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை |
| 2 க.பா.பஸ்லீனா | தி அல்-பத்தா முஸ்லிம் வித்தியாலயம் |
| 3 சீ.வினோஜா | மட் குமாரவேலியர் கிராமம் வித்தியாலயம் |
| **கட்டுரை வரைதல் கடிதம் வரைதல் 2** | |
| 1 எச்.இஸ்ஸத கமீஹா | கமு ஆயிஷா பெண்கள் மகா வித்தியாலயம் |
| 2 த.கோபிதா | கிளி முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 3 ஏ.எம்.பாத்திமா முபாஸியா | மட்.ஓட்டமாவடி பாத்திமா மகளிர் பாலிகா வித்தியாலயம் |
| **கட்டுரை வரைதல் கடிதம் வரைதல் 3** | |
| 1 பா.ஜசிந்தா | யா வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை |
| 2 ந.பவித்திரா | கிளி புனித திரேசா மகா வித்தியாலயம் |
| 3 ந.ஆரணி | தி சென்.மேரிஸ் கல்லூரி |
| **கட்டுரை வரைதல் கவிதை நயத்தல் 4** | |
| 1 வா.தர்மிசா | யா.யூனியன் கல்லூரி |
| 2 மு.ச.பாத்திமா சித்தீக்கா | கமு அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை |
| 3 மு.நி.அ.அ.பாத்திமா பர்ஹத் | மட். மில்லத் மகளிர் மகா வித்தியாலயம் |
| **தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் 5** | |
| 1 த.சசிரேகா | மட். மகாஜனாக் கல்லூரி |
| 2 யு.எல்.றிசானா | கமு அல் மர்ஜா முஸ்லிம் மகளிர் கல்லூரி |
| 3 ந.நுகிர்தா | கிளி மத்திய மகா வித்தியாலயம் |
| **இலக்கணப் போட்டி 4** | |
| 1 ஆ.பா.பாத்திமா றிபானா | மட்.மீரா பாலிகா மகா வித்தியாலயம் |
| 2 தி.சிறி ரஜீவன் | கிளி. இந்துக் கல்லூரி |
| 3 அ.அன்ரனற் நிரோஜினி | மு முல்லைத்தீவு மகா வித்தியாலயம் |
| **இலக்கணப் போட்டி 5** | |
| 1 தி.காயத்திரி | யா.மகாஜனாக் கல்லூரி |
| 2 மு.ச.றினோசா | கமு சம்ஸ் மத்திய கல்லூரி |
| 3 ஆ.பிரதீபன் | மட் கிரான் குளம் விநாயகர் மகா வித்தியாலயம் |
| **திறனாய்வுப் போட்டி 5** | |
| 1 வி.மயூரதாஸ் | யாழ்.புற்றளை மகா வித்தியாலயம் |
| 2 எம் முசாதிக் | கமு அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி |
| 3 எம் இர்பானா | தி அந்-நஹ்ஹார் முஸ்லிம் மகளிர் மகா வித்தி. |

| போட்டியாளர் பெயர் | பாடசாலை |
|---|---|
| **குறு நாடக ஆக்கம் 4** | |
| 1 வே.சுபிதா | கிளி கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி. |
| 2 சௌ.கபிலா | யா.கொழும்புத்துறை இந்து மகா வித்தி. |
| 3 ஐ.முகமது முபாசிர் | கமு அல் மதீனா வித்தியாலயம் |
| **குறுநாடக ஆக்கம் 5** | |
| 1 கு.அறிவழகன் | யா.மல்லாகம் மகா வித்தியாலயம் |
| 2 ஹ.நூர்ஜஹான் | தி. அல் - மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயம் |
| 3 கா.கஜீகரன் | வவு. புதுக்குளம் மகா வித்தியாலயம் |
| **கவிதையாக்கம் 4** | |
| 1 அ.அனுஷானி | யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 2 எஸ்.ஸ்ரனி கிஷோகர் | மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி |
| 3 த.நிதர்சன் | தி. இ.கி.மி.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| **கவிதையாக்கம் 5** | |
| 1 மு.ரபீத் யுஸ்லா | மட் மீரா மகளிர் மகா வித்தியாலயம் |
| 2 அ.ஜெ.டெனிஷியஸ் | மு. வித்தியானந்தாக் கல்லூரி |
| 3 சி.சிவரூபன் | யா. சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி. |
| **சிறுகதை ஆக்கம் 4** | |
| 1 மு.கேதுஜா | கமு. விபுலானந்தா மத்திய கல்லூரி |
| 2 கி.சிவபிரஷாத் | தி. இ.கி.மி.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 3 நா.நிரூபா | வ. சைவப்பிரகாச மகளிர் மகா வித்தியாலயம் |
| **சிறுகதை ஆக்கம் 5** | |
| 1 ரா.அருஸ் | தி.கிண்ணியா மத்திய கல்லூரி |
| 2 யோ.ரிஷிகா | யா. மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| 3 ப.லோககீதா | வ. சைவப்பிரகாச மகளிர் மகா வித்தி |
| **பேச்சு 1** | |
| 1 சு.சிரஞ்சீதன் | வ.விபுலானந்தா மகா வித்தியாலயம் |
| 2 ம.மயூரேசன் | தி.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 3 பா.லெடிசியா | மன். பெரியமடு மகா வித்தியாலயம் |
| 3 ஏ.ஜி.எவ்.சம்ஹா | கமு. அல் - மனார் மத்திய கல்லூரி |
| **பேச்சு 2** | |
| 1 ரவீந்திரமூர்த்தி ஜனகன் | மட். சிவானந்தா வித்தியாலயம் |
| 2 ஜெ.ஜெயந்தினி | வ. இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் |
| 3 வ.ரொசீன் மெலானி | யா.இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் |
| 3 திவ்யா அந்தோனிப்பிள்ளை | மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி |
| **பேச்சு 3** | |
| 1 பி.கேஷினி ஏஞ்சலா | தி. சென்மேரிஸ் கல்லூரி |
| 2 கி.துஷாகரன் | வ.வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் |
| 3 ஏ.ஜே.எவ். சுமையா | கமு. அல் - மனார் மத்திய கல்லூரி |
| **பேச்சு 4** | |
| 1 சி.அபிராமி | தி.சென்மேரிஸ் கல்லூரி |
| 2 வேலும்மயிலும் கிளக்ஷா | மு. யோகபுரம் மகா வித்தியாலயம் |
| 3 ஆ.அருண்யா | வ. விபுலானந்தா மகா வித்தியாலயம் |
| **பேச்சு 5** | |
| 1 தெய்வேந்திரன் ஹர்சன் | யாழ். மத்திய கல்லூரி |
| 2 எச்.டகானா | கமு. அல்- மனார் மத்திய கல்லூரி |
| 3 சி.பிரஷாத் | கிளி. முருகானந்தா மகா வித்தியாலயம் |

(04,10) (நாளை தொடரும்)

# அரசியல் விழிப்புணர்வு ஏற்படாவிடின் முழு நாடுமே அழிவைச் சந்திக்கும்!

## புதிய ஜனநாயக கட்சி செயலாளர் செந்திவேல்

(கொழும்பு)

இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்ற நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், நாட்டு மக்கள் அனைவரும் ஒவ்வொரு இரவும் நித்திரைகருச் செல்லும்போது இரண்டு விடயங்கள் குறித்து ஏக்கத்துடனும், அச்சத்துடனுமே இரவைக் கழிக்கின்றனர்.

ஒன்று வேகமாக நாளாந்தம் உயர்ந்துசெல்லும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, மற்றது மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ என்ற அச்சமாகும். இந்நிலையிலிருந்தான் நாட்டின் பொருளாதார அரசியல் நடப்புக்களை இன்றைய அரசாங்கம் வழிநடத்திச் செல்கின்றது. இவற்றைப்பற்றிச் சரியானதும், தூரநோக்குடனுமான அரசியல் விழிப்புணர்வு, தட்டிக்கேட்கும் வெகுஜனப் போராட்ட ஒன்றிணைவு ஏற்படாது விட்டால் முழுநாடும் அபாயங்களையும், அழிவுகளையும் சந்திக்கவேண்டிய சூழ்நிலைகள் மிகவேகமாக வளர்ந்து வருவதையே காணமுடிகிறது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி தெஹிவளை கல்கிசை மாநகரசபை ஜெயசிங்க மண்டபத்தில் நடத்திய அரசியல் கருத்தரங்கில் உரையாற்றிய கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் கூறினார்.

சட்டத்தரணியும், கட்சியின் அரசியல்குழு உறுப்பினருமான சோ. தேவராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

இன்றைய அரசாங்கத்தின்கீழ் புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தை என்பது தொடங்கப்படுவதற்கான ஒரு சிறு புள்ளி ஆரம்பத்தைக்கூடக் காணமுடியவில்லை. ஜனாதிபதி புலிகளுடன் பேசப்போவதாகவும், எந்தக் காரணம்கொண்டும் யுத்தத்திற்குச் செல்வதில்லை என்றும், மீண்டும் மீண்டும் கூறிவருகிறாரேதவிர அதற்கான அர்த்தமுள்ள எந்தவொரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கக் கட்சிகளுக்குள் பேச்சுவார்த்தைபற்றி ஒருமுக நிலைபாட்டை எடுக்கமுடியாத கையறு நிலையிலேயே ஜனாதிபதி இருந்து வருகிறார். இந்நிலையில் புலிகளுடன் பேச்சுவார்த்தைபற்றி சகல கட்சிகளுடனும் பேசப்போவதாகவும், அதனடிப்படையில் தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை உருவாககப்போவதாகவும் கதைகள் பேசிவருவதைக் காணமுடிகிறது. இவை காலத்தை இழுத்தடித்துச் செல்வதற்கான உத்தி முறையே அன்றி, உருப்படியான செயற்பாட்டுககான ஆலோசனைகள் அல்ல. இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நேர்மையுடனும், மனப்பூர்வமாகவும் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவதுபோன்று காட்டிக்கொள்ள விரும்புகிறது.

ஆனால், அதன் அடிமனதில் ஊறியிருப்பது தேசிய இனப்பிரச்சினையைத தீர்ப்பது பற்றிய அக்கறையல்ல. பதிலுக்கு இன்றைய பேச்சுவார்த்தை முட்டுக்கட்டை நிலையைத தனது எதிர்கால ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் பாதைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலேயே கண்ணாக இருந்துவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முழுக்கவனமும் அடுத்துவரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலேயே பதிந்துநிற்கிறது. அதற்கான வியூகங்களை அமைப்பதிலும், அதற்குரிய காய்களை நகர்த்துவதிலுமே அவர்கள் ஈடுபட்டுவருகிறார்கள்.

அவ்வாறே, ஆட்சியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி - தெற்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் படிப்படியாக விழுங்கித் தானே பௌத்த சிங்கள மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு பேரினவாதக் கட்சியாகிக் கொள்வதிலும், அதனூடாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் தூரநோக்குடனும் செயற்பட்டு வருகின்றது. அதன்காரணமாகப் பேச்சுவார்த்தையைத் தீவரமாக எதிர்ப்பதிலும், புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை நிராகரிப்பதிலும் முன்நிற்கின்றது.

இவற்றை உற்றுநோக்கும்போது நாட்டையும், மக்களையும் இன்றைய அபாயங்களில் இருந்து, குறிப்பாக பிரதான பிரச்சினையாக இருந்து வரும் தேசிய இனப்பிரச்சினையின் யுத்த சூழலில் இருந்து விடுவிக்கும் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வுக்கான விடயத்தை தத்தமது ஆட்சியதிகாரத்திற்கான சூதாட்டமாகவும், காய் நகர்த்தல்களாகவுமே நடத்திவருதைக் காணமுடிகின்றது.

இதனால் பத்தொன்பதுவருட கொடிய யுத்தம் மீளவும் அரங்கிற்கு வந்துகொள்ளவும், அவ்வாறு வருமானால் அதன் அழிவுகள் பேரழிவுகளாகவும் அமைந்துகொள்ளவே செய்யும்.

இதனால் பாதிக்கப்படப்போவது கடந்த காலங்களைப்போன்று வடக்கு- கிழக்கு தமிழ்மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களுமாகவே இருப்பர். ஆனால், வசதிவாய்ப்பு, சொத்துசுகம் படைத்த சகல இன மேட்டுக்குடியினரும் எவ்வித பாதிப்பையோ, இழப்பையோ பெறப்போவதில்லை. பதிலுக்கு அவர்கள் பலவகை இலாபங்களையே பெற்றுக்கொள்வார்கள். அவர்களோடு சேர்ந்து அந்நிய ஆதிக்க சக்திகளும் நன்மை பெறவே முயலுவார்கள்.

எனவேதான், இவ்வாறான யுத்த அபாயத்தைத் தடுத்துநிறுத்தவுள்ள ஒரே வழி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்கவேணடும் என்பதாகும். பத்தொன்பதுவருட யுத்தத்தின்பின்பு விடுதலைப் புலிகள் ஒரு இடைக்கால நிர்வாகத்துக்கான யோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். அதனை அடிப்படையாகக்கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இரு தரப்பையும் விட்டுக்கொடுததுப் புரிந்துணர்வுடன் இடைகால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த முன்வரவேண்டும என்பதையே சமாதானத்தை விரும்பும் தமிழ்மக்கள் உட்பட அனைத்து மக்களும் விரும்புகிறார்கள்.

எமது கட்சியும் அதனையே வற்புறுத்துகின்றது. அதற்கான வெகுஜன இயக்கத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏனைய இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் இணைந்து முன்னெடுப்பதை வலியுறுத்தியே இந்த அரசியல் கருத்தரங்கை நடத்தி ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அச்சுவேலி எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு சிறப்புற நடைபெற்றது

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் முதலாவது சங்கம நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.45 மணியளவில் தேசிய எழச்சிப் பேரவையின் செயலாளர் சு.விக்கினேஸ்வரராசா தலைமையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பொதுச்சுடரை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதியும், அருட்சகோதரி டிலானி, ஆசிரியை திருமதி விஜய வரதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தியாகி திலிபனின் திருவுருவப்படத்திற்கு அரசியற்துறையைச் சேர்ந்த ரவி, அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளர் ஜெகனும், கரும்புலி கலைமதியின் திருவுருவப் படத்துககு அவரது சகோதரி நாகேஸவரியும் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர். அடுத்து அகவணக்கம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பிரதேச செயலரினால் தலைமையுரை வழங்கப்பட்டது.

தொடர்ந்த சிறப்புரையை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில், பொருளாளர் சிவராசாவும் வழங்கினர். தொடர்ந்து மக்களுடைய முன்மொழிவுகள், இனங்காணப்பட்ட பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இன்றைய சமகால அரசியல் நிலைபாடுகள் தொடர்பாகவும் மக்களுடைய பங்களிப்புத் தொடர்பாகவும் தேசிய எழச்சிப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமாகக் கூறினார்.

# யு.என்.டி.பி நிதி உதவியுடன் மீனவர்களுக்கு கடனுதவி!

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப பிரதேசத்துக்கான கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு 71 யமஹா வெளியிணைப்பு இயந்திரங்கள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டநிதிமூலம் அண்மையில் வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தால் சங்க அங்கத்தவர்களுக்கு கண்ணாடி இழைப்படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், கட்டுமரங்கள், கடற்தொழில் உபகரணங்கள் சுழறசி முறைக்கடன் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கு ஏற்கனவே 300 இலடசம் ரூபா வழங்கப்பட்டிருந்தது.

இதில் இரண்டாம்கட்டக் கடன் நிதியுதவியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 47 வெளியிணைப்பு இயந்திரங்களை அங்கத்தவர்களுககு கையளிக்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமையன்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில் நடைபெற்றபோது, கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், கடறதொழில் பரிசோதகர் ந.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு வெளியிணைப்பு இயந்திரங்களை அங்கத்தவர்களுக்குக் கையளித்தனர்.

மிகுதியாகவுள்ள 24 யமஹா வெளியிணைப்பு இயந்திரங்கள் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கங்களின் பயனாளிகளுக்கு வெகுவிரைவில் வழங்கப்படவிருப்பதாக கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார் (21)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் அல்லற்படும் நாவலடி மக்கள்!

அல்வாய் கிழக்கு நாவலடிப் பகுதியில் வசிக்கும் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படைச் சுகாதார வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் கொலனித் திட்டத்தின்கீழ குடியமர்த்தப்பட்டவர்கள், காலைக்கடன்களை நிறைவேற்ற வயல்வெளி, காட்டுப்பகுதிகளையே பயன்படுததி வருகின்றனர். பெரும்பாலானவர்களுக்கு நனநீர் வசதி கிடையாது. இவர்களுக்கென்று கட்டப்பட்ட பொதுக்கிணறு பராமரிப்பற்று பாவிக்க முடியாத நிலையில் இலலாமல் காணப்படுகிறது. தனியாருக்குச் சொந்தமான நன்நீர் கிணறொன்றே பலருக்கும் கைகொடுத்துதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (13)



சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முகப்புமண்டப திறப்பு விழாவில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை முகப்பு மண்டபத்தைத் திறந்துவைப்பதையும், அருகில் நன்கொடையாளிகள் அ. பீற்றர் யேசுதாசன் குடும்பத்தினரும் காணப்படுகின்றனர்.



வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்பட்டு, அந்த நிகழ்வின் இறுதிநாளன்று கல்லூரிகளுக்கிடையே மூன்று பிரிவாக நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும், மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற சனசமூக நிலையங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இறுதிநிகழ்வாக ஓய்வுபெற்ற முன்னாள் செயலாளர்களான நடனசபாபதி ஞானவேல், பெரியதம்பி கனகசபாபதி ஆகியோருக்கு - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (116)



வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தினால் நடத்தப்பட்டுவருகின்ற கணினிப்பயிற்சிநெறியில், பயின்று சித்தியடைந்த 2 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக் குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் (இடது) யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி நடராஜசுந்தரம் நிற்பதையும் காணலாம். (14)



'ஓவியத்தளிர்'மாதாந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவில், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கத்திடமிருந்து முதற்பிரதியை மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் அருணாசலம் பெறுவதைப் படத்தில் காணலாம். (91)

# நவோதய வாரம்!

கரவெட்டிப் பிரதேச நவோதயப் பாடசாலை, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, நவோதய வார இறுதி நாள் நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டாடியது. இதில் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் கண்காட்சி இடம்பெற்றது. இந்தக் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணர் கலந்து கொண்டார். இந்தக் கண்காட்சி பெற்றோர் மற்றும் வெளியார பார்வைக்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருநதது. கண்காட்சியில் நவோதயத் திடடத்தின் கீழ் பாடசாலைக்கு வழங்கப்பட்ட உபகரணங்களும் பார்வைககாக வைக்கப்பட்டிருந்தன. கோட்டச் கல்வி அதிகாரி பாராடடிப் பேசினார். (13)



கலாசாரம்

# பொக்கிசம்

குறமகள் என்ற வள்ளிநாயகி ராமலிங்கம் ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவர். ஈழத்து சிறுகதைத் துறையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். சிறுகதைகளோடு, கட்டுரை, கவிதைகள் என்ற துறைகளிலும் சிறந்த ஆக்கங்களை செய்த இவர் - அப்போதைய, குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மேடைப் பேச்சாளர்களில் ஒருவர்.

1954 ஆம் ஆண்டிலிருந்து எழுதிவரும் இவர் - அண்மையில்தான் தனது 'குறமகள் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். தற்போது குறைவாகவே எழுதி வந்தாலும், குறமகளின் எழுத்துக்கள் தரம் குறையாதவை. கனடாவில் வாழ்ந்து வந்தாலும் - இலக்கிய ஆர்வமும், அதன் மீதான நெருக்கமும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. குறமகள் ஐந்து எழுத்தாளர்களுடன் சேர்ந்து 'மத்தாப்பு' என்ற குறுநாவலை எழுதினார்.

குறமகள் கதைகள் என்ற தொகுதி - ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதிகளிலேயே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்றாகும். மேடைக்குத் தக்கதாக கருத்துக்களை மாற்றிச்சொல்லும் ஈழத்தின் ஒருசில பெண் எழுத்தாளர்கள் போல் இல்லாமல், தனது கருத்தை ஆணித்தரமாகவும், உறுதியோடும் வெளிப்படுத்தி வருபவர் குறமகள். 1997 ஆம் ஆண்டில் இவரது போராளி மகள் - மாவீரர் ஆனார். அந்தப் பிரிவுத்துயரை மறப்பதற்காக, அண்மைக்காலமாக மீண்டும் குறமகள் எழுதத் தொடங்கி இருக்கிறார்.

குறமகளுடைய கதைகள் இப்போது வாசிக்கும் போது, புத்தம் புதியனவாக தோன்றுவதற்கான காரணம் அந்தக் கதைகளில் உள்ள உண்மையும், ஆணித்தரமான பார்வையுமே ஆகும். ஈழத்துச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் குறமகளின் பெயர் தவறாமல் குறிப்பிடப்படும். 1963 இல் வெளியான 'சலனம்' என்ற அவரது சிறுகதை இது.

செ.யோகநாதன்

# சலனம்

வள்ளிநாயகி இராமலிங்கம்




யாழ் - கொழும்பு மெயில் வண்டி கொழும்பு நோக்கி விரைகிறது. இரண்டாம் வகுப்பு 'பேர்த்' வண்டியில் 7,8 ஆம் படுக்கைகள். நேரம் பதினொருமணி. மேற் படுக்கையில் அவனது மக்களிருவரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கின்றனர். கீழே ஆசை மனைவி சுலோ தூங்குவது போன்ற பாவனை. சரிந்து படுத்துக் குமுறிக்கொண்டு இருக்கிறாள். அவளது நீண்ட சாட்டை போன்ற பின்னல் வெள்ளைத் தலையணையில் பாம்பு போல் நெளிந்து கிடக்கின்றது. அவன் உள்ளம் கவரும் மண்ணிறப் பூக்களும், பொன்னிறப் பூக்களும் கலந்த அவளது கிமோனா - மெழுகு போன்று பளபளக்கும் வலக்காலை வெளியே காட்டி முழந்தாள்வரை விலகிக் கிடக்கிறது. பால் போன்ற நிலா ஜன்னலினூடே வந்து, பாதையின் வளைவு நெளிவுகளுக்கேற்ப அங்கமிங்கும் நர்த்தனமாடி, அறையையே ஒரு திரைப்படமாக்குகிறது.

திறந்திருந்த யன்னலருகே அவளது பாற்பக்கமாக முகத்திற் தேக்கிய சிந்தனையோடு அமர்ந்திருந்த கதாநாயகனின் முகத திற்பட்டுத் தெறித்து, அவள் கால்மீதூர்ந்து இடுப்புவரை ஓடுகிறது வெள்ளிநிலா. நிலவின் ஓட்டத்தோடு, அவனது கண்கள் அவள மீதோடுகின்றன. மார்புகளும், தோள்களும் மேலெழுந்து ஒரு பெருமூச்சைக் கக்குகின்றன. இன்றுவரை எத்தனையோ பிரயாணங்கள் மிக இன்பமாகவும், உல்லாசமாகவும் கழிந்திருக்க, இன்று மாத்திரம் ஏன் இந்த நிம்மதியின்மை? மனதில் ஓர் இறுக்கம்.

விவாகமாகிப் பத்து வருடங்கள். நீண்ட காலம் போல தோன்றினாலும், அவர்களது உள்ளத்து இளமை இன்னமும் புதுமணத் தம்பதிகளோ எனப் பிறர் ஐயுறும் வண்ணம் வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் ஒட்டுதலோ பல பிறவிகளிலும் தொடர்நது வந்த ஓர் பிணைப்பு. கலகலவென்ற சிரிப்பும், என்றும் குன்றாத உற்சாகமும், இடைக்கிடையே சிறு சிறு பொய்ப் பூசல்களும், ஒருவரையொருவர் வளையய வருவதற்கு உந்துதல்கள். ஒத்த குணமும், ஒத்த மனமும் அந்தத் தம்பதிகளிடையே! இன்றுபோல் ஒரு சந்தர்ப்பம் என்றுமே ஏற படவில்லை.

எங்கே இது அன்பின் அத்திவாரத்தையே அசைத்துவிடுமோ என்று பயந்து தவித்தான் தாஸ். ஆம், ஆறுமுகதாஸ் என்ன மனித உள்ளமோ எனத் தன் இதயத்தையே நொந்தான் அவன். வாழ்விலும், தாழ்விலும் கைகோர்த்து நடக்க வந்தவள் - உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணித்தவள். இனியும் தன் வாழ்நாள் பூராவும் அவனோடு கழிக்கவேண்டியவள், அப்படிப்பட்ட ஒருத்தியின் இதயத்தை நோகச் செய்யலாமா? ஐயோ பாவம். அவன் அன்பை, அவன் தூய்மையை எல்லாவற்றையும் சந்தேகிக்கும் வண்ணம் நடந்துகொண்டானே! இனியும் தங்கள் அன்பு பழைய நிலைக்கு வருமா? அவளுடைய மலர்போன்ற இதயத்தைக் கூம்ப வைத்துவிட்டானே? அவனுடைய புத்திக்கூர்மையை அடிக்கடி வியந்து பாராட்டுவாளே. அந்தப் புத்திக் கூர்மையே இன்று அவனைக் காட்டிக்கொடுத்து விட்டதே.

வாழ்க்கையில் ஏதாவது மனக்கசப்பான விடயங்கள் நடைபெற்றிருந்தால், அவற்றைப் பிற்காலத்தில் எண்ணிப் பார்க்கும்போது அதன் ஆரம்பக் கட்டமாகிய ஒரு சிறு பொழுது அந்தச் சில நிமிடங்கள் - வாழ்க்கையிலேயே வராதிருந்தாலோ என ஏங்குவது மக்கள் இயல்பு. அது போலத்தான் ஆறுமுகதாஸும் அந்தச் சிறு நிமிடங்கள் தன் பிரயாணத்தில் வராதிருந்தால் என ஏங்கினான்.

நடந்தது இதுதான். யாழ் புகையிரத நிலையத்தில் வந்துகொண்டிருந்தனர் ஆறுமுகதாஸ் தம்பதிகள். தம் தாய், தந்தையர், உறவினர் என்ற அன்புச் சிறையில் பதினாறு நாட்களாக இருந்துவிட்டு, வேலைக்குத் திரும்புகிறான் தாஸ். எந்தக் கடும் பிரயாணத்தையும் உல்லாசமாக வரவேற்று, அதிலேயே இன்பங்காணும் திறன் அவனுக்கு மாத்திரமல்ல, சுலோவுக்கும், மக்களுக்கும்கூட அமைந்திருந்தது. எட்டு வயது மகனும், நான்கு வயது மகளும் கையில் வீணையும், றபானுமாக நிற்கிறார்கள். வண்டியில் ஏறினால் தமது படுக்கையறையில் சுலோ பாட, தாஸ் வீணை வாசிக்க, பிள்ளைகள் றபான் தட்ட நித்திரை போகும்வரை ஒரே கும்மாளந்தான்.

தம்முள்ளே பரிகாசம் பண்ணியும், அறிந்தோரைக் கண்டால் கலகலவெனப் பேசியும், நிலையத்தின் பரபரப்பில் ஒன்றி நின்றபோது...

"சுலோ, சிவபெருமான் வாறார், இதோ பார்" என்று காதுக்குள் கிசுகிசுத்தான் தாஸ்.

கூட்டத்திடையே வந்த கூடைக் கொண்டை ஒன்று கண்ணுக்குப் புலப்பட்டது. ஆளைத் தெரியவில்லை. அவன் விரல்கள் சுலோவின் நீண்ட பின்னலைக் கைக்குள் சுற்றிக்கொண்டன. அவளும்தான் என்ன சளைத்தவளா?

"இதோ பாருங்கள், ஆண்கள் மாத்திரம் கூடாரம் கட்டலாமாக்கும்" என்று ஒரு இளைஞனைக் காட்டியவாறே திரும்பினாள். அவள சொன்னதை அவன் கவனிக்கவில்லை. கையிலிருந்த பின்னல் நழுவியது. அவன் கண்கள் சென்ற திசையில் அவள் பார்வை சென்றது. அந்தக் கூடைக் கொண்டைக்காரி இவர்களுக்கு வெகு சமீபத்தில் நின்றிருந்தாள்.

அவள் நல்ல அழகி. செக்கச் சிவந்த மேனி. திரண்டு உருண்ட கட்டான உடல். கூந்தலலங்காரம் அவளைக் கர்வமுடையவள் போல் தோனறச் செய்தாலும், அழகான கருகருவென்ற கண்கள் கருணையைப் பொழிந்து கொண்டிருந்தன. முகத்தில் மலர்ச்சியில்லாவிட்டாலும், ஒரு வகைச் சாந்தி பரவியிருந்தது. அவளது கைகளில்லாத கடும் பச்சை நைலோன் சட்டை, மேனி நிறத்தை ஒருபடி தூக்கிக் காட்டியது. சந்தன நிற நைலக்ஸ் சேலை - அவளது அமைவான மேனியைத் தழுவி நின்றது. கழுத்திலே தாலிக்கொடி மின்னியது. காதிலே ஒரு சங்குத்தோடு, ஒரு அகலமான பிளாஸ்டிக் வளையல். நெற்றியிலிருந்து பிடரிவரை கொண்டைக்குள் அகப்படாத மயிரெல்லாம இயற்கையாகவோ, அன்றேல் வேறுவிதமாகவோ சுருண்டு பதிந்து வளையங்களாக ஒரு தனியழகைக் கொடுத்தன. இவற்றை ஒரே பார்வையில் அளவிட்டு "ஓ அழகுள்ள பொருள் என்றும் ரசனைக்குரியது என்கிறாரல்லவா கீற்ஸ்" என்று கேலியாகச் சிரித்தவாறே அவனை நோக்கினாள் சுலோ.

ஆனால்... அவனுடைய கண்கள் ஒரு குறிப்புமில்லாமல் எங்கோ திரும்பின. அவற்றில் ஓர் ஏக்கம்! ஒரு தவிப்பு! ஓர் அவதி! முகம் இருண்டிருந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள். அவன் இந்த உலகத்தில் இல்லையென்பதைப் புரிந்துகொண்டாள் சுலோ. ஊசி குத்தியதுபோல் இதயத்தில் ஒரு மெல்லிய வலி. தன்னையறியாமலே ஒருவித சிரத்தையோடு அந்தப் புதியவளைப் பார்த்தாள்.

அப்போது... தற்செயலாக இவர்கள் பக்கம் திரும்பிய அவள் கண்கள்- ஆணழகன் ஆறுமுகதாஸ் மீது படர்ந்து நிலைத்தன. அவன் கண்களிலே வியப்புக் கலந்த ஓர் ஒளி. முகத்திலே ஒரு செம்மை கலந்த மலர்ச்சி. உடம்பில் ஓடும் அவ்வளவு இரத்தத்தையும் ஒரேயடியாக முகத்தில் 'பம்ப்' பண்ணிவிட்டதுபோலத் திடீரென்று பரந்து, விரிந்தது முகம். சட்டென்று இருண்டது. தாஸ் தன் விழிகளை மெல்ல அவள் பக்கம் திருப்பினான். பார்வை சந்தித்தது. அதனால் இடருற்றுத் தயங்கிய அவள் விழிகள் - தாழ்ந்து சொருகின. வண்ணத்துப் பூச்சியை பிரசவிக்கப் போகும் மயிர்க்கொட்டிக் கூட்டுப் புருவங்களில் ஒரு சிறு அசைவு. வேறுபுறம் திரும்பிக் கொண்டான் தாஸ். உணர்ச்சிக் குவியல்களால் சில்லிட்டு இருந்த அந்த இரு வதனங்களையும் மாறி மாறிப் பார்த்து, நாடகத்தை அணு அணுவாக அனுபவித்தாள் சுலோ.

நல்ல காலம், நாடகத்துக்குத் திரை விழுந்தது. ஆம், புகையிரதம் மேடைக்கு வந்து கொண்டிருந்தது.

ஒருவிதத் தடுமாற்றத்தோடு மனைவி, மக்கள் பின்தொடருகிறார்களா என்பதையும் கவனிக்காது, தம் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு 'பேர்த்' வண்டிக்குள் அவசர அவசரமாக ஏறினான் தாஸ. தம்மறைக்குள் பெட்டிகளைத் திணித்துவிட்டு ஜன்னலருகே விரைந்தான். கூட்டத்தைத் துருவி ஆராய்ந்து, கூடைக்கொண்டையில் பார்வையை நிறுத்தி அதனோடு தன் விழிகளைத் தொடர விட்டான்.

சுலோ - தன்பாட்டில் குழந்தைகளை ஏற்றி அறைக்குள் விட்டும், பின்னர் பெட்டிகளை வைக்க வேண்டிய இடங்களில் வைத்தும் ஒழுங்கு செய்தாள். அவள் மனம் பொருமிக்கொண்டிருந்தது. துள்ளிச் சிறகடித்துப் பறந்த ஒரு வண்டு - அடிபட்டு விழுந்ததுபோல் அவள் இதயம் சோம்பிக் கிடந்தது. சிங்காரக்கீதம் இசைத்துக் கொண்டிருந்த அவள் இதய வீணையில் ஏதோ ஒரு நரம்பு இளகித் தளர்ந்து கொண்டிருந்தது. தன் கண்ணெதிரே தன் கணவனுக்காக ஏங்கும் ஒருததியையும், அவளுக்காக ஏங்கும் கணவனையும் கண்ட பின்பும் மனம் சமாதானமாக இருக்க நளாயினியால்கூட முடியாதே! எத்தனை அழகிகளையும் கண்டு தடுமாறாத அவர் - தன்னுடன் வேலை செய்யும் நவநாகரிக நங்கையரைச் சுலோவுக்கும் அறிமுகப்படுத்திச் சரளமாகப் பழகும் பண்புடைய அவர்... அவளைப் பார்த்தா தடுமாற்றம் அடைவார்? சுலோவிலும் பார்க்க இருபது புள்ளிகள் கூடப்போகலாம் என அபிப்பிராயம் தெரிவிப்பாரேதவிர, இப்படியா மெய் மறந்து முகம் சிவந்து, தடுமாறுவார்? இவர்களிடையே ஏதோ பழந்தொடர்பு இருக்கவேண்டும். ஒருவேளை சாந்தியோ...?

மணமான புதிதில்... சேந்தாங்குளம் கடற்கரையில் தாஸ் - சுலோ. மாலை நேரம் கடற்காற்று உடலைத் தழுவிக் குழைகிறது. தமது பால்ய வீரப்பிரதாபங்களை ஒருவருக்கொருவர் சொல்லும் மகிழ்ச்சி. இயற்கை இன்பத்தை அனுபவித்து, அதில் தம்மை மறக்கும் களிப்பு. ஒருவரை ஒருவர் பெற எத்தனை தவம்புரிந்தோமெனச் சொல்லி உணரும் இறுமாப்பு. இதன் மத்தியில் சட்டென்று தாஸ் - "உமக்கு முன்பு யார் மீதாகுதல் காதல் அல்லது கரிசனை இருந்ததோ?" என்று கேட்டுவைத்தான்.

பாகற்காயைக் கடித்தது போலிருந்தது சுலோவுக்கு. எத்துணை இன்பமான சமயத்தில் சந்தேகமும், விபரீதமுமான கேள்வி. ஏதோ அவர் மனதில் உறுத்துகிறதுபோலும். யார் நினைவோ வந்துவிட்டதோ என்று எண்ணியவாறே, "நான் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விடுதிச் சாலையில் விவாகமாகும் வரை இருந்து படித்த படியால், எனக்கப்படியொரு சந்தர்ப்பமும் நேரவில்லை. என்றாலும், உங்களை முன்பு கண்டு காதலித்திருந் தாலோ என ஏங்குகிறது என் மனம்" என உருகினாள் சுலோ.

"நல்ல காலம், சுலோ - காதலித்திருந்தால், கடடாயமாக கலியாணம் நடைபெற்றிருக்க முடியாது. ஒருவிதத் தடையுமே இருக்க நியாயமில்லாமல் மலரும் பல காதல்கள் - காதல் என்ற வார்த்தை ஒன்றுக்காகவே புதுப்புதுத் தடைகள் தோன்றவும் முறிந்து விடுகின்றன."

அவன் கண்கள் சிந்தனை வசப்பட்டு, நெடுந்தூரம் சென்றன. பாகற்காய் கசந்து தொண்டையில் இறங்கியது சுலோவுக்கு. அவன் கரங்களுள் சிறைப்பட்டிருந்த தன் கைகளை விடுவித்தவாறே - " அனுபவ உண்மை போலிருக்கிறது" என்றாள் சுலோ.

சுலோவைக் கூர்ந்து பார்த்தான் தாஸ்.

"நீர் கெட்டிக்காரிதான்." இதில் என்ன கெட்டித்தனத்தைக் கண்டானோ! முகத்திலே செயற்கையான மலர்ச்சியை வருவித்துக் கொண்டே, "அப்ப - அவிட்டு விடுங்கோவன் உங்கடை சரககிலை கொஞ்சத்தை" என்றாள்.

சர்வ சாதாரணமான காதல்தான் ஆறுமுக தாஸுடையது. அவள் பெயர் சாந்தி. அமைதியும், அழகும், நாகரிகமும் வாய்ந்தவள். தானும் தன்பாடுமாயிருப்பாள். இரு வகுப்புக்கள் கீழே படித்தாள். அவன் துடிப்பும், ஆர்வமும், கலகலப்பும் கொண்ட இளைஞன். அவனது ஒவ்வொரு செயலையும் கண்டித்தோ, பாராட்டியோ மாணவ மாணவிகள் அவன்மீது பாய்ந்து விழும்போது, சிறிது தொலைவில் நின்று அதை ரசித்து வரவேற்று, தன் கண்களால் உற்சாகமூட்டுவாள் சாந்தி. அந்த விழிகளுக்கு அடிமையானான் அவன்.

காதல் பிறந்து, விழிகளால் வளர்ந்து, கடிதங்களினால் உரமூட்டப்பட்டது விந்தையிலும் விந்தை. இதுவரை ஒருநாள்கூட நேரில் பேசியதில்லை. பெற்றோரும் அறிந்திருந்தனர். குலம், குணம், பணம் ஒன்றுமே தடையில்லை. ஆனால்... பல்கலைக்கழகத்திலிருந்த காலத்தில் திடீரெனச் சாந்தியின் விவாகம் முடிந்து விட்டது.

காரணம் தெரியாது. வந்த நல்ல சம்பந்தத்தைத் கைவிட மனமில்லாதிருந்திருக்கலாம். அமைதியும், இளகிய மனமுமுடைய சாந்தியின் எதிர்ப்புப் பலனளிக்காதிருந்திருக்கலாம். கிணற்றுத் தவளைதானே என்ற துணிவில், படிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துக் காதலில் தீவிரங்காட்டாத தன் நலிவாயுமிருக்கலாம். நன்றாக வாழ்கிறார்களெனச் கேள்வி. முதற் காதலால் ஏற்பட்ட வடு மாறாது எனக் கூறுகின்றனர் அறிஞர்கள்.

அவ்வளவுதான் அவனது முழுச் சரக்கும்.

"ஓகோ, அறிஞர்களா அப்படிக் கூறுகிறார்கள்? சரி... சரி... அதைப்பற்றி இப்பவும் கவலையா?" சிரிப்பு முகத்தில் நடித்தது. கசப்பு நெஞ்சுக்குள் இறங்கியது.

"சே, அது பழங்கதை." தன்னைச் சுதாகரித்துக் கொள்ளும் முயற்சி.

"அல்லாவிட்டால் இப்படி ஒரு ரோஜா கிடைக்குமா? அதுவும் எனக்கு ஏழு வயதிலே, எனக்காகவே எழுதுமட்டுவாளில் பிறந்து, சங்கானையில் வளர்ந்து, பண்டத்தரிப்பிலை படித்து, வழிமேல் விழிவைத்து வாயைப் பிளந்து கொண்டு ஒன்று காத்திருக்க, நான் தலையாலை



உழுதாலும் முடியுமா? அவன் முகம பழையபடி ஒளிபெற்று, உற்சாகமடைந்து. குறுமபு குறுகுறுத்து.

ஆனாலும், சுலோவுக்கு நெஞ்சில் இறங்கிய கசப்பு மாறச் சிறிதுகாலம் தேவையாக இருந்தது.

காலம் அவர்களை மேலும், மேலும் பிணைத்தது. ஒருவரையொருவர் அறிந்து, நெளிவு - சுழிவுகளுக்கேற்ப வாழ்ந்தார்கள். இன்ப வானில் மிதந்தார்கள். சுலோவின் சுட்டித்தனமும் குறும்பும் - அவனோடு போட்டி போட்டு வளர்ந்தன. சுமாரான அழகும், ஒல்லியான தேகமுமானாலும், சுலோவின் விளையாட்டுத்தனமான போக்கு அவனை அப்படியே கட்டி வைத்திருந்தது. தோழமை பயின்ற வாழ்வு. இன்றுவரை உள்ளத்தை தாக்கக்கூடிய செயல் ஒன்றுமே உண்மையாக நேரவில்லை. தானாக வருவித்துக் கொள்ளும் பொய்க்கோபம், சண்டை, சமாதானம் உள்ளத்துக்கு உரமேற்றும். இது, இதயத்தைச் சல்லரித்தது.

'பாவம், பழைய அதிர்ச்சி இருக்கத்தானே செய்யும்? அதற்குத் தன்நிலை மறப்பதா?'

புகையிரதம் புறப்படத் தொடங்கியது. 'பேர்த' ஆள் வந்து டிக்கட் கேட்டபோதுதான் தலை நிமிர்ந்தான் தாஸ்.

சுயநிலை வந்ததும் பரபரப்போடு உள்ளே நுழைந்தான். எல்லாம் ஒழுங்காக இருப்பதைக் கண்டு அசட்டுச் சிரிப்பொன்றைச் சிந்தினான். கொந்தளிக்கும் உணர்ச்சியை அடக்கி, முறுவல் ஒன்றை வரவழைத்தவாறே, "யாரது சாந்தியா?" என்றாள் சுலோ.

கள்ள நெஞ்சம் உள்ளூரத் திடுக்கிட்டது. பதிலில்லாத ஒரு முறைப்பு ஒன்றும் பேசாது ஆசனத்தில் உட்கார்ந்தான்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# சங்ககாலமும், தற்காலமும்

தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆரம்ப காலம் சங்ககாலம். அக்கால இலக்கியமான, எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு அக்கால மக்களின் வாழ்க்கை முறையை, அழகுற விளக்கின்றது. குறிப்பாக அக்கால மக்களின் வீரத்தின் சிறப்பை அங்கு நடைபெற்ற போர்களின் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டு



கின்றது.

சங்க காலத்தில் நிகழ்த்தப்பட்ட போர்களில் மனிதத்தை மதிக்கும் மனிதநேயம் என்ற பெருந் தன்மை இழையோடி, இலைமறைகாயாக இருந்தே வந்துள்ளது.

மன்னர்களில் பெரும்பாலானோர் தங்களது சக்கரவர்த்திப் பட்டத்துக்காக, யுத்தங்களில் திட்டமிட்டு ஈடுபட்டு, தம் புகழை திசை எங்கும் எட்டச் செய்தனர். உக்கத்தை மறந்த மன்னர்கள் - போரிடும் யுக்தியில் மனித இரக்கத்தை எதிர்பார்க்க முடியாததால் - உடைமைகளும், உயிர்களும் அழிவைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

இருந்தபோதிலும், மன்னர்கள் கொண்டிருந்த சில நியதிகள் - அவர்களின் மானிடத்தை நேசிக்கும் பண்பை மெருகூட்டவே செய்கின்றது.

போர் தொடங்குவதற்கு முன்னதாகவே அது பற்றித் திசை எங்கும் உள்ள மக்களுக்கு பறைமூலம் தகவல் அனுப்பி, கர்ப்பிணிப் பெண்கள், வயது முதிர்ந்தவர், நோயாளிகள் போன்றவர்களை எல்லாம் வெளியேறச் செய்ததன் பின்னரே, அந்த நாட்டில் யுத்தத்தின் சத்தத்தை சித்தம் கலங்கும் வண்ணம் மொத்தத்தில் உணரமுடியும்.

ஆனால், இன்று நடக்கும் அடக்கு முறை யுத்தங்களில் ஈடுபடுவோர் மனிதநேயத்தை எள்ளளவுக்கும் கருத்திலெடுப்பதில்லை. வெடிகுண்டுகளைப் போட்டு, கர்ப்பிணிப் பெண்களையும், முதியவர்களையும், நோயாளர்களையும் கொன்று யுத்தத்தில் ஈடுபடுகின்றார்கள்.

அன்றைய சங்க காலத்து புற நானூற்றில் ஒரு பாடலில்

**நிரப்பாது கொடுக்கும்**
**செல்வமும் இவனே**
**இல்லென மறுக்கும் சிறுமையும்**
**இவனே**
**ஈர்ந்தையோயினே**
**பாண்பசிப்பகைவன் யாம்தன் இரக்கும்**
**காலைத்தான் எம்**
**உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்**
**கருங்கை சொல்லனை இரக்கும்**
**திருந்திலை நெடுவேல் வடித்திடின் எனவே**

ஒரு போர்வீரன் தன்னிடம் பசியென்றுவந்த ஒரு புலவனின் வறுமையை போக்க, தன்னிடம் ஒன்றும் இல்லையே என்று வருந்தப்படுகிறான். பின்பு அவன் ஓர் கொல்லனிடம் சென்று அந்தப் புலவனின் வறுமையை போக்க பொருள் இருந்தும், கொடுத்துதவ விரும்பாதவர்களிடம் - நான் போரிட எனக்கொரு வேல் வேண்டுமென கூறுகிறான். தெளிவாகச் சொன்னால் ஒரு புலவனின் பசியை போக்க, யுத்தம் மேற்கொள்வேன் என்கின்றான்.

இதனையே பாரதியும்

**"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"**

என்று பாடினான். ஆனாலும் இன்றுவரை இது பாட்டளவிலேயே நிற்கின்றது. இன்றைய காலத்தில் அரசியல் சுயநலத்திற்காகவும், தன் வல்லரசுப் பட்டத்தை நிலை நிறுத்தவும், அப்பாவி மக்கள் மீது யுத்தத்தினை திணித்து அவர்களை பட்டினிபோட்டே சாகடிக்கச் செய்ய யுத்தத்தினை நடாத்துகின்றனர்.

புறநானூற்று காலத்தில் மன்னர்கள் தவறு செய்யும் போதெல்லாம் - புலவர்களும், அமைச்சர்களும், மன்னனுக்கு புத்திமதிகளை இடித்துரைத்து, அவனை அடக்கி வைத்திருந்தமையை காணக்கூடியதாய் இருந்தது.

ஆனால், இன்றைய காலத்தில் சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஜனாதிபதிகளுக்கு, "வீடுகொளுத்திற ராசாக்களுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கிற மந்திரிமார்" போன்ற அமைச்சர்களே காணப்படுகின்றனர்.

மேலும், இன்றைய இலக்கியங்களில் பெரும் பான்மையானவை அடக்குமுறைக்கு எதிரான தாகவே காணப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்கள் - அடக்க நினைக்கும் அதிகார வர்க்கத்தினை நோக்கி

**உங்கள் வாழ்வு நிரந்தரமல்ல**
**ஏனென்றால் எங்கள் அச்சம்**
**தற்காலிகமானதென்பதால் என்றும்**
**போர்க்களந்தான் - இனி நமக்கு**
**பொழுது போக்கும் வீடு - இதை**
**ஆர்த்தெழுந்தே நம் பகைவர்**
**அறியும் படி பாடு எனவும்**
**உரிமைக் குரலொடு உரத்துக் கூறுகின்றனர்.**
**எழுதும் எமக்கு கரத்தில் கொண்டோம்**
**ஈனர் தம்மை அழிப்போம் - மக்கள்**
**அழுது பெருக்கும் கண்ணீர் வெள்ளம்**
**அடங்க வழிகள் வகுப்போம்.**

என்ற பாடல் மூலம் இடம்பெயர்ந்து, சொந்தங்களை இழந்து நிற்கும் மக்களினுடைய துன்பத்தை தம் துன்பமாக கருதி, போரிடுவோம் என்ற மனவுணர்வும் வெளிப்படுத்தப்படுகிறது.

எனவே, சங்ககால புலவர்கள் அங்கு நடந்ததை உள்ளத்துணர்வுடன் வெளியிட்டுள்ளனர். ஆனால், இன்றைய கவிஞர்கள் விடுதலை வேட்கையை மனத்திற்கொண்டு அதை அடைவதற்கான தூரநோக்கோடு பாடல்களை பாடுகின்றனர் என்றால் புதுமையானது.

**சர்மிளா**

## ஆசை

சொந்த ஊரில் எனக்கு
வாழவென்று ஆசை
சோறு போட்ட வயலை
உழுது விதைக்க ஆசை
வீரபத்திரர் கோயிலுக்கு
விரதமிருக்க ஆசை வீதி வரும் சாமிக்கு
தோள் கொடுக்க ஆசை
எனக்கு உள்ள ஆசை
அர்த்தமுள்ள ஆசை
ஆனால் என் ஊர் மீது ஆமிக்கும் ஆசை
குந்தியிருந்தவன் குறுக்க தடைபோட்டு
வலயம் எண்டு பேசுகிறான் பாசை
எனக்கு புரியவில்லை
அவன் பேசும் பாசை
வடிவாய் நான் பார்த்தனான்,
அவன் முகத்தில் இல்லை மீசை
காது செவிடாக கேட்டது வெடி ஓசை
இழந்து நடந்தோம்
எம் ஊரை இங்கே நாம் சுமந்தது
துயருடன் தெரு தூசை
விடிவு வந்ததென்று விரைந்தேன்
ஊர் போகும் ஆசை வீதியின் குறுக்கே
போட்டிருந்தான் இரும்புக் கோசை
அன்னை நிலத்தில் படுத்துறங்க ஆசை
அதை தடுப்பவனின்
உயிர் எடுக்க ஆசை
கிரிலப்பனையினிலே எமக்கில்லை ஆசை
கீரிமலையினிலே உனக்கேன் ஆசை
உங்களுக்கு வந்ததோ விபரீத ஆசை
சிங்களத் தலைமையே
கரியாக்கிறாய் காசை
நீ இருக்கும் இடமெல்லாம்
நாம் தட்டவேண்டும் தூசை
எங்கள் காதில் கேட்க வேண்டும்
கோயில் மணியோசை
உயிர் மீது ஆசை இருந்தால்
தூக்கி விடு உன் சூக்கேசை
உனக்கு கேட்கிறதா புலி உறுமும் ஓசை

- பொன்னாலைக் கண்ணதாசன்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"அப்பா இந்தாங்கோ 'மவுத்ஒகன்' தொடங்குவம்" ஆரவாரம் செய்தான் மைந்தன். அப்பா இன்றைக்கு வாசிக்கமாட்டார். மூட் சரியில்லை. மீண்டும் ஒரு முறைப்பு.

மகன் பாய்ந்து சென்று அப்பா மடியில் ஏறி, வீணையை வாயில் பொருத்தினான். வேண்டாவெறுப்பாக வாசிக்கத் தொடங்கினான்.

"அம்மா பாடுங்கோ, பாடுங்கோ."

"என்ன பாடுவது?" தாஸின் முகத்தைப் பார்த்தாள். "எதையெண்டாலென்ன பாடுமன்" பொறுமையின்மை தெரிந்தது. சுலோ தொடங்கினாள்.

"நெஞ்சம் மறப்பதில்லை..."

குரலில் சோகம் இழைந்தது. அடுத்த கணம் ஒரு கோபப் பார்வையை வீசிவிட்டு, மகள் மடியில் வீணையைப் போட்டுவிட்டு, ''கொம்மாவும் நீங்களுமாய் ஒப்பாரி வையுங்கோ'' என்றவாறே வெளியேறினான்.

"ஒப்பாரி என்றால் என்னம்மா?" என்ற குரல் காதில் விழுமுன்னரே - அவன் கால்கள் பெட்டிகளுக்கூடாக குறிப்பிட்ட இடத்தை நோக்கி விரைந்தன.

அவன் வெளியே போவதற்குத்தான் நிலைகொள்ளாது தவித்தான் என்பது சுலோவுக்குத் தெரியும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொணடான் அவ்வளவுதான். குழந்தைகளுக்கு முன்னால் அவனைப்போல் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளமுடியாது ஒரு தாயால். தன்னுணர்ச்சிகளையும், திகைப்பையும் அடக்கிக்கொண்டாள்.

"அப்பா உம்மை விட்டிட்டுப் போய்விட்டார். இனி அம்மாவும் நானும்தானே போவம்" பெரியவன் வீறாப்புப் பேசினான். சில சமயங்களில் மகள் அழுதால், அவளையும் தூக்கிக் கொண்டு வண்டியின் நீளம் முழுவதும் அளந்துவேடிக்கை காட்டிவருவான் தாஸ். அப்போது நண்பர்கள், அறிந்தவர்களைக் கண்டால், பேசிவிட்டு வந்து சுலோவுக்குத் தகவல் கொடுப்பான். குறிக்கப்பட்டவர்களைச் சந்திக்க வேண்டியிருந்தால் - மகனையும், சுலோவையும் அனுப்புவான். அதுவும் ஒரு பொழுதுபோக்கு. அதைத்தான் மகன் நினைக்கிறான் என்று தெரிந்தாலும், தாஸின் அப்போதைய நிலையைக் கற்பனை பண்ணினாள் சுலோ.

"நேரே போவாரா? பேசுவாரா? சந்திப்பாரா? பார்வை படும் இடத்தில் நின்று பொழுது போக்குவாரா? தன் கவலையைக் கண்ணால் பரிமாறிக் கொள்வாரா? சே, என்ன அசட்டுத் தனம்! அவர் எபபவுமே குழந்தைதானே. சிறு வயது ஞாபகத்தில் சில நிமிடங்கள் வாழ்கிறாராக்கும்" என்று பலதும் எண்ணி இடர்பட்டாள்.

தாஸ் திரும்பி வந்தான். நடைபாதையால் போய்விட்டு வரும் சாட்டில் இருமுறை பார்த்தாயிற்று. நெஞ்சு படபடக்கிறது. திரும்பித் திரும்பிப் போகமுடியுமா? ஆவல் முன்னுக் கிழுத்தது, அறியாத பயம் பின்னுக்கிழுத்தது.

"சாப்பிடுவோமா சுலோ?" "அதற்கென்ன?"

குழந்தைகளுக்கு ஊட்டிவிடுவதுதான் தன் கடமை என்பது போல் ஊட்டிவிட்டான். பிள்ளைகள்கூடப் பெற்றோரின் மௌனத்தை அனுசரித்துப் பேசாமலே சாப்பிட்டனர். உற்சாகமற்ற சாப்பாடு, வாய்திறந்தாலே ஏதாவது வெளிக்கிட்டுவிடுமோ என்ற அச்சம் சுலோவுக்கு. சிந்தனைக் குழப்பம் அவனுக்கு. பாவம் சிறிது விட்டுப் பிடிப்போமென்றிருந்து விட்டாள் சுலோ. தன்னுடுப்பை மாற்றிக் கிமோனாவைப் போட்டுக்கொண்டாள். குழந்தைகளைத் தூங்கப் பண்ணிவிட்டு, எழுந்து நின்றான் தாஸ்.

மணி எட்டரை, சாரத்தை எடுத்துக் கொடுத்து, "உடுப்பை மாற்றுங்களேன்" என்றாள் அவள். "நீர் லைட்டை அணைத்துவிட்டுப் படும். நான் ஒரு நண்பனைச் சந்திக்க வருவதாகச் சொன்னேன். கெதியில் வந்துவிடுவேன்." தயக்கத்துடன் வந்தது குரல்.

சட்டென்று எழுந்து கதவை அடித்துப் பூட்டினாள் சுலோ. கதவோடு சாய்ந்துகொண்டு குரோதம் பொங்கும் கண்களால் பார்த்தாள். உணர்ச்சி அறிவை வென்றுவிட்டது.

"நண்பரா? யாரவர்? நானறியாத நண்பரே உங்களுக்கில்லையே. கடந்த பத்து வருடங்களில் இதுதான் நீங்கள் கூறும் முதல் பொய்யா? அல்லது எமது வாழ்வே பொய்மையின் அத்திவாரத்தில் கட்டப்பட்டதா? இதுவரை நான் பசப்பலிலே ஏமாந்தவளா? இந்தக் குழந்தைகள் ஏமாற்றத்தின் சின்னங்களா?..."

அதற்குமேல் சுலோவுக்கு ஒன்றுமே வரவில்லை. முதன் முதலாகக் களவெடுத்தவன்-கையும், பொருளுமாக அகப்பட்டால் என்ன நிலையிலிருப்பானோ அப்படி இருந்தான் தாஸ். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே கண்கள் கூசின. அங்கே நிற்பது சுலோவல்ல; கண்ணகி. விளையாட்டுத் தோழியல்ல; ஆட்டிப் படைக்கும் அரசி. மனைவியல்ல; மனந்தடுமாறும்போது ஆட்கொள்ளும் தெய்வம். அவன் கனவுலகம் மெல்ல மெல்லத் தேய்ந்தது. நிஜ உலகம் பையப்பையக் கண்முன் விரிந்தது. உடல் கூசிக்குறுகியது. சபலத்துக்கு அடிமையான உள்ளம் தருணத்தில் தட்டப்பட்டுவிட்டது. எட்டாக் கனிக்குக் கொட்டாவி விட்டுப் பயனென்ன? தன் நிலை கெட்டு நிறையழியப் பார்த்தானே...!

சாரத்தைக் கையிலெடுத்தான். காதலன் கணவனாகிவிட்டான்.

மனப்பொருமலை அடக்க முடியாது படுக்கையில் படுத்துவிட்டாள் அவள். தலையணையில் புதைந்தது முகம்.

உடுப்பை மாற்றி, மின்விளக்கை அணைத்தான். சுழலும் விசிறியையும் நிறுத்திவிட்டு, ஜன்னலருகே இருந்தான். ஓடும் சந்திரனில் பார்வை ஓடிற்று. மனது குமைந்தது. ஜன்னல் வழியாகக் குளிர்காற்றும் நிலவும் புகுந்து விளையாடின. அந்த இரு உள்ளங்களும் வேதனையால் துடித்தன. ஒரே மௌனம்.

ஒன்று தனது சிறுபொழுதுச் சபலத்தை எண்ணி, அன்பு மனைவிக்குத் துரோகம் விளைவித்ததற்காகத் துடித்தது. ஆசை ரோஜாவின் இதய மலரை வாட வைத்துவிட்டேனே என்று புலம்பிற்று. பெண்களுக்குக் கற்புப்போல் ஆண்களுக்கு நிறை மிகமிக அவசியம்.

உயிரைக் கொடுத்தாலும் நிறையைக் காப்பேனென்று சுலோவோடு விட்ட சவாலுக்குச் சோதனை ஏற்பட்டதேயென வருந்திற்று. எல்லாவற்றுக்கும் மேலாகத் தன் உண்மை அன்பும், தூய்மையும் சந்தேகத்துக்கு உட்பட்ட, நம்பிக்கை சிதறுண்டதேயென அழுது வடிந்தது.

மற்றொன்று, அடிமனதில் புதைந்திருந்த காதல் முற்றாக அழிந்து விட்டதேயென்று மனப்பால் குடித்தேனேயென்று கனன்றது.

நீறு பூத்த நெருப்பாக இருந்தாலும், தன் அறிவினால் அதை அடக்கி ஆளவில்லை எனக் கொதித்தது. தனக்காக வாழும் மற்றொரு ஜீவனைப்பற்றி சிறிதாயினும் யோசிக்கவில்லையெனக் குமுறியது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கண்ணும் கண்ணும் கலந்த இரண்டு வருடக் காதல் வாழ்வு- உள்ளமும், உடலும், உயிரும் கலந்த பத்துவருட அன்பு வாழ்வை ஒரு நொடியில் வென்றுவிட்டதே எனப் புகைந்தது; வெடித்தது.

நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது.

பாரந்தாங்கிய கருமுகில்கள் மழையைப் பிரசவித்துவிட்டு, லேசாகி மேலெழுவதுபோல உள்ளத்து வேதனை சிறிது சிறிதாகக் கரைந்தது.

'பாவம், மறுபேச்சின்றி உடுப்பை மாற்றினாரே. தனக்குத் தெரிந்துவிட்டதேயென்று உள மனம் மறுகி வேதனைப்படுவாரே. தாழ்வுணர்ச்சியால் அவதிப்படுவாரே. சிறு கலக்கம் ஏற்பட்டாலும் கபால இடி வந்திடுமே. படுக்கையில் சரியாது குளிர்காற்றில் இருக்கிறாரே...

உள்ளம் மற்றச் சீவனுக்காகப் பச்சாதாபத்தால் துடிக்கத் தொடங்கியது. அறிவுக்கும், உணர்ச்சிக்கும் நடந்த போராட்டத்தில் உணர்சசி வென்றது முன்பு. ஆனால் இப்போது உணர்ச்சிகளுக்குள் போராட்டம். ஒரே போராட்டம். அதில் அன்பு வென்றுவிட்டது.

சுலோவின் உடலில் சிறிது சபலம். கோபம் குறைந்தால், வழக்கமாகக் காணும் அறிகுறி அதுதான். பால் நிலவின் திரைக்காட்சியில் அவளையே பார்த்துக்கொண்டிருந்த தாஸ் மனதில் சிறிது தென்பு. அவள் கதவடியில் நின்ற காட்சி - மனதில் விரிந்தது. அவள் கேட்ட கேள்விகள் காதைத் துளைத்தன.

இவ்வளவு காலததிலும், ஒருநாள்கூட காணக்கிடைக்காத உரிமையை நிலைநாட்டும் கற்பரசியின் சீற்றம் பயத்துடன்கூடிய மகிழ்ச்சியை அளித்தது. 'என்ன பவித்திரமான அழகு! இந்த அழகை அவளிடம் நான் இதுவ்ரை காணவில்லை என்றுதானே என் மனம் சலனம் அடைந்தது என்று எண்ணும்போதே, அவன் உள்ளத்தில் புதுக் கிளர்ச்சி ஊற்றெடுத்து உடலெங்கும் பரவியது. கிமோனா வைச் சரிப்படுத்தும் சாட்டோடு தன் நடுங்கும் கைகளை அந்தக் கால் மேல் வைத்தான். ஒருவிதமான எதிர்ப்பும் இல்லை.

சுலபத்தில் கிடைத்த மன்னிப்பு அவன் உள்ளத்தை உருக்கிக் கண்களிற் பொங்கியது.

மனத்து மாசைக்கழுவி, அவன் போற்றி வளர்க்கும் நிறையைக் காத்து வடிந்தது.

கைகள் அவள் கால்களை வருடின.

மடிந்து நிமிர்ந்த கரங்களுள் வருடிய கைகள் கவிந்தன.

கண்ணீர்த் துளிகள் ஒன்றுடன் ஒன்று கலந்தன.

நிலவு மோகனமாகச் சிரித்தது. ◆

## உண்மையின் ... மனிதக் குரல்கள்

*மனிதங்களின் பரிகாசிப்பு!*
*மமதையின் பிரவாகிப்பு!*
*புனிதங்களின்... குரலாய் இப்போது*
*பூக்கும் தமிழீழம் எனச் சொல்ல*
*புலிக் கொடி தாங்கி, விழுப்புண் ஏந்தி,*
*விதை குழிக்குள்...*
*மூடப்பட்ட வீரவரலாறு.*

*மனிதங்களின்... முன்னே நின்று*
*மாள முடியாத சோகத்தில், வெந்து*
*மனிதங்களின்... கொடும்பாவிகளில்*
*எரிப்புக்களில் எழுந்து...*
*மனதை எழுச்சி... கொள்ளவைக்கும்*
*மாண்பு மிக்க மனங்களில் ஆரவாரிப்பு.*

*சுய நலத் திரையாவும் – விலக*
*மாயத்தின்... முகங்கள்... அழிய*
*வேகத்தின் பொங்குதமிழ் உணர்*
*அலைகள் பொங்க*
*வெட்கத்தில் உயிர்பிரிந்து மனிதமில்லாத*
*மனதங்களின் தீயில்கருகி மாண்டுவிட்டது.*

*தோற்றுப் போனவர்கள்... நாமல்ல*
*நேற்றுப் போலத் தெரிகிறது,*
*உண்மையில் மனிதக் குரல்கள்*
*உதிரம்... சிந்தியே... உயிர்ப்பூவை*
*கொடுத்தவர்கள்,*
*வித்துடல் மீது சபதம் எடுத்தோம்.*
*விடியும்... நாளை ஈழம்... என்று.*

பவித்திரா-

## மழை வருமோ

**இதமாய் வீசிய இளந்தென்றலும்**
**குளிரானது ~**
**இனிய தென்றல் இதமும்**
**இன்பமூட்டவில்லை ~ இன்று**
**குளிர் காற்றில் கூடிய**
**கருமுகிழ்கள்**
**குதூகலத்தைக் கூடவே**
**கொடுக்கவில்லை ~ அன்றைய**
**நினைவு மட்டும் நெஞ்சை நெகிழ**
**வைக்கிறது.**
**நித்தம் வீசிய புயலாய் நிலை**
**சாய்ந்த மரங்கள் எத்தனை.**
**எங்கும் பொழிந்த மழை**
**வெள்ளமதில் எடுத்தெறியப்பட்ட**
**எங்கள் சொத்து எச்சங்கள் தான்**
**எத்தனை.**
**இத்தனையும் நடந்ததே**
**அன்றைய மழையில் அப்போது?**
**இதமாய் இருக்கும் இன்றைய**
**நிலையும் இப்போது**
**இனி மாறி இருள் மூடி மழை**
**இடித்திடுமோ**
**இதயம் கனக்கிறதே!**
**இருள்தான் விலகிடுமோ...?**

**- பொன். சுகந்தன்**




## ஆக்கத்திறன் கண்காட்சி

(வன்னேரி)

வன்னேரிக்குளம் - ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் நோக்குடன் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# புலிகளின் திட்டவரைபை அரசு நிராகரிக்க முடியாது

## - மன்னார் ஆயர் தெரிவிப்பு



விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசு அதனை நிராகரிக்க முடியாது. அரசினால் தயாரிக்கப்படும் திட்டத்தை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசெப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாக அவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த போட்டியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அடக்குபவர்கள்தான் விட்டுக் கொடுப்பை செய்யலாம். அடக்கப்படுபவர்கள் விட்டுக் கொடுப்பை எப்படி செய்ய முடியும். இனியும் தமிழர்கள் அடங்கிப் போகமுடியாது.

சந்திரிகா அரசின் மாற்றுத்திட்டம் என்பது, சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார் என்ற பிரமையை உலகிற்கு காட்டுவதற் கும், தான் சார்ந்த அரசியல்வாதிகள் சுகபோக வாழ்க்கையை தொடர்ந்து வாழ்வதற்கு அரச இயந்திரத்தை இயக்குவதற்கான ஒரு கண் துடைப்பு அரசியல் தந்திரமே ஆகும்.

தமிழரின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்காது விட்டால், தொடர்ந்தும் சமாதானப் பயணத்தில் தடை ஏற்படும். இது ஆபத்தானது, பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும், இலங்கைத் தீவையே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும், யுத்தம் ஆரம்பிப்பதற்கே சாதகமாகும், விலை வாசி உயர்வும், பணவீக்கமும் ஏற்படும்.

தென் இலங்கையில் ஜே.வி.பி. போன்றோரைத் தவிர 98 வீதமான மக்கள் தமிழருக்கு உரிமைகளை வழங்குவதன் மூலமே சமாதானத்தை அடையமுடியும் என்பதில் தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதுடன், அந்த வழியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு வீதமானவர்கள் மட்டும்தான் தமிழரின் உரிமைகளை மறுத்து தமிழரின் தேசியப்போராட்டத்தை அழிப்பதன் மூலம் சமாதானத்தை அடையமுடியும் என தப்புக்கணக்கு போடுகிறார்கள்.

பெரும்பான்மையான மக்கள் யதார்த்தத்தை புரிந்துவிட்டார்கள். சிங்கள மதபீடங்களின் தலைவர்களை நான் சந்தித்த போது, அவர்களும் சமாதானத்தையே விரும்புகின்றார் என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

அரசியல்வாதிகள் தமது அரசியல் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு கட்சிக்காக நாட்டு மக்கள் நலன்களை மறந்து செயற்படுகிறார்கள்.

தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்வதையும் சமாதான வழிமுறையில் ஐக்கியத்துக்கான பாதையிலிருந்து ஜே.வி.பி.யும், சில பௌத்த சிங்கள பேரினவாதிகளும் சிங்கள மக்களை திசை திருப்பி தீயவழிக்கு இட்டுச் செல்கின்றார்கள்.

கடந்தகால யதார்த்தங்களையும், வரலாற்றையும் கற்றுக் கொள்ளாதவர்களே கடும் போக்கை கடைப்பிடிக்கின்ற சிங்கள இன வெறியர்கள் ஆவர். இவர்களின் செயற்பாடு இலங்கைத் தீவை பாதாளத்துக்குள் தள்ளும். இவ்வாறானவர்களால் மக்கள் விமோசனம் அடையமுடியாது. சிங்கள தேசியவாதிகள் இலங்கை பல்தேசியம் கொண்ட நாடு, பல மதம், பல கலாசாரம் கொண்ட நாடு என்பதையும், இனப்பிரச்சினை ஒரு தேசியப்பிரச்சினை என்ற அரசியல் அடிப்படை யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கைத்தீவு ஒற்றையாட்சிக்குரிய நாடு அல்ல என்பதை தென் இலங்கை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் உரிமையையும் தமிழ்பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும். அதனை தடுப்பது தமிழரின் அடிப்படை மனிதஉரிமைகளை மீறும்செயல்.

தென் இலங்கை அரசியல்வாதிகள் இதய சுத்தியுடனும் உண்மையாகவும், நீதியாகவும் பேச்சுக்களுக்கு வரவேண்டும். உண்மையும் நீதியும் இன்றி சமாதானம் அகிம்சை என்று கூறுவதில் அர்த்தமில்லை. தமிழரின் உரிமைகளை மறுத்து சமாதானப் பயணம் செல்ல முடியாது. தமிழர் தரப்பு தன்னாலான விட்டுக் கொடுப்புக்களை எல்லாம் செய்துவிட்டது. இனியும் விட்டுக் கொடுப்பதற்கு எதுவுமில்லை.

சிங்களத் தரப்பு எவ்வளவு உச்சக்கட்டமாக தமிழர்களை அடக்கி ஆளலாம் என்று தான் சிந்திக்கிறார்களே தவிர தமிழர்களுக்கு முடிந்தளவு உரிமைகளை வழங்குவோம் என்று சிந்திக்கவில்லை.

அடக்குபவர்கள் தான் விட்டுக்கொடுப்பை செய்யலாம் அடக்கப்படுபவர்கள் விட்டுக் கொடுப்பை எப்படிச் செய்யமுடியும். இனியும் தமிழர்கள் அடங்கிப்போக முடியாது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் உலகிடம் பணம் பெற்றுக்கொண்டு, அர்த்தமற்ற அடக்குமுறை சமாதானம் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழரின் உரிமைகளை வழங்குவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். சுய அரசியல் நடத்தும் காலம் இது அல்ல.

கட்சி வளர்க்கும் அரசியலை விடுத்து தேசிய அரசியலை உருவாக்கி நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும். ஏட்டிக்குப் போட்டியாக கட்சி அரசியலே நடைபெறுவதால் நாடு இருளில் மூழ்குகின்றது. இது இக்காலத்துக்கு ஒவ்வாத அரசியல் என்பதனை அரசியல்வாதிகள் புரிந்து கொண்டு தூரநோக்குச் சிந்தனையில் நடைமுறை யதார்ததம் பற்றி சிந்தித்துச் செயற்படவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# முல்லை மவாட்ட செயலகத்தில் அடையாள அட்டைகள் தேக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்த போது அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த சிலர் அங்கிருந்து சென்றுள்ளதால் பல அடையாள அட்டைகள் அங்கு தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்துத் தெரியவருவதாவது - கடந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாக பல இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து சென்ற பலர் முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்த வேளை அங்கிருந்து அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனினும் தற்போதைய யுத்த நிறுத்த சூழ்நிலையில் அவர்கள் அங்கிருந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். இந்த நிலையில் விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகள் முல்லைத்தீவு அரச செயலகத்திற்கு கிடைத்துள்ளது.

அவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எமில்டா சுகுமாரன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றவர்களின் விபரங்கள் யாழ் செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக் கழகததுககு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதால் அங்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ளவர்கள் அவற்றைப் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையங்களில் இளைஞர்களுக்கு மரவேலைப் பயிற்சி

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் மரவேலை தொழில் நுட்ப பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டும் நோக்குடன் இப்பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி ஆறுமாதகாலம் தொடர்ந்து நடைபெறும். பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

கடந்தவாரம் கண்டாவளை பிராந்திய தொழில்பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சி தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தில் ஏ.ஏ.ரி.கற்கை நெறிமுதல் தடவையாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி லண்டன் ரி.ஆர்.ரெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சிநெறிக்கு ஆங்கில மொழி மூலம் விரிவுரைகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகிறது. (9)

# 206 கி.மீ. நீளமுடைய ஏ தர வீதிகள் புனரமைப்பு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வன்னி பெருநிலப்பரப்பில் ஏ தரத்திலுள்ள வீதிகளின் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 206 கிலோமீற்றர் நீளமுடைய வீதிகளில் 130 கிலோமீற்றர் நீளமான வீதி இதுவரை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதில் முகமாலையிலிருந்து புளியங்குளம் வரையான ஏ-9 வீதியில் 66 கிலோமீற்றர் நீளமான பகுதியும், பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் 52 கிலோமீற்றர் நீளமான பகுதியும், மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் 49 கிலோமீற்றர் நீளமான பகுதியும், பூநகரி - மன்னார் வீதியில் 38 கிலோமீற்றர் நீளமான பகுதியும் இதுவரை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பி.தர வீதிகளில் சோரன்பற்று - தாழையடி வீதியில் 7 கிலோமீற்றர் நீளமான பகுதியும், மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியில் 38 கிலோமீற்றர் நீளமான பகுதியும் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவு - புளியங்குளம், முல்லைத்தீவு - கொக்குளாய் வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளது. வன்னியில் 157கி.மீ நீளமான பி.தர வீதியில் 40 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 48 வீதமான வீதிப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது. (கெள)

## பஸ்சேவை நடத்த கோரிக்கை

கிளிநொச்சி நகரிலிருந்து கல்மடுநகர் ஊடாக தேவிபுரத்துக்கான பஸ் சேவையை நடத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது, கிளிநொச்சியிலிருந்து தேவிபுரம் செல்லும் பயணிகள் பஸ்கள் கடைச் சந்தியில் நிற்கும் பயணிகளை ஏற்றாது செல்வதால், பெருமளவான பயணிகள் ஏமாற்றமடைகின்றனர்.

அத்துடன், அதிகளவான பயணிகளை ஏற்றி வருவதால் பஸ்ஸில் ஏறமுடியாதுள்ளதாகவும் தெரியவருகிறது. இதனால் கல்மடு நிலையம் ஊடாக மதியம் 1 மணிக்கு புதிய சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)







உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களை வளப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியால் கடனடிப்படையில் 72 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிகழ்வில், வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களில் ஒரு தொகுதியையும், விவசாயி ஒருவருக்கு உழவு இயந்திரம் வழங்குவதையும், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தென்பகுதி ஊடகவியலாளர்களின் வரலாற்றுக் கடமை

தென்பகுதி ஊடகவியலாளர்களில் ஒரு தொகுதியினர் யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளனர்.

தென்பகுதி ஊடகவியலாளர்கள் வடபகுதிக்கு வந்து செல்வது இதுதான் முதற் தடவையல்ல. போர்க்காலங்களிலும் சரி சமாதான சூழலிலும் சரி பல்வேறு ஊடகங்களைச் சார்ந்த பலர் இங்கு விஜயம் செய்து பலதரப்பட்டவர்களையும் சந்தித்து பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு தாம் உணர்ந்தவற்றை தாங்கள் தாங்கள் சார்ந்த ஊடகங்களின் தன்மைகளுக்கேற்ப, தமது பயண அனுபவங்களை, பார்வைப் பதிவுகளை எழுதி வெளியிட்டு வந்துமுள்ளனர்.

அவர்கள் தமது பதிவுகளில் உண்மைகளை முழுமையாகவும் - தமது உணர்வுகளை எந்த வித உரு மறைப்பும் இன்றி வெளிப்படையாகவும் தென்பகுதி மக்களுக்கு 'தன் நெஞ்சறிவது பொய்யற்க' என்ற நிலையிலிருந்து உணர்த்த முயன்றார்களா என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் யுத்தம் தொடர்பான செய்திகளை சுயாதனமாக வெளியிடும் உரிமையை அரசாங்கம் பாதுகாப்பு மற்றும் அவசரகால சட்ட விதிகளின் படி மிகக் கடுமையாகவே ஊடகங்களுக்கு மறுத்திருந்தது தெரிந்த விடயமே. கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தில் சுருக்கிடப் பட்டிருந்தது.

தணிக்கை அதிகாரிகளினால் சிதைக்கப்பட்ட நிலையிலேயே சகல செய்திகளும் ஊடகங்களூடாக வெளியாகின...

அதனையும் மீறி உண்மையை உண்மையாய் வெளியிட முயன்ற ஊடகவியலாளர்கள் அரச படையினரால் அச்சுறுத்தலுக்குள்ளானார்கள், சிலர் கொலையும் செய்யப்பட்டார்கள்.

தென்பகுதி ஊடகவியலாளர்கள் பலர் அரசசார்பு செய்தியாளர்களாகவே தம்மை மாற்றிக் கொண்டு பொய்யானதும், தென்பகுதி மக்களை உண்மை எதனையும் உணராது இருட்டினில் இருக்க வைக்கும் தன்மை கொண்டதுமான செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றை கற்பனையில் உருவாக்கி வெளியிடும் 'எழுதுகோலை' அவமதிக்கும் செயல்களில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வப்போது அரசாங்கம் தமிழ் மக்களுக்கும், அவர்களது விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெருமெடுப்பில், பெரும் நிதிவளத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட பிரசார யுத்தத்தில் இத்தகைய ஊடகவியலாளர்களின் பங்கு கணிசமானதாகும்.

இராணுவ விமானங்களில் அரச படைகளின் பாதுகாப்புடன் அவர்களின் விசேட விருந்தினர்களாக வடபகுதிக்கு அழைத்துவரப்பட்ட ஊடகவியலாளர்கள் தமக்கு காட்டப்பட்ட காட்சிகளையும், ஊட்டப்பட்ட கருத்துக்களையும் மட்டும் வைத்துக் கொண்டு தமது ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்திப் பரபரப்பூட்ட முயன்ற போர்க்களச் செய்திகள் எத்தகைய பொய்மையின் அடிப்படையிலானவை என்பதை அவர்களே அறிவர். பின்னர் வரலாறு அவர்களின் ஊடகங்களின் ஊடான கருத்தியல் பொய்களை தென்பகுதி மக்களுக்கு உணர்த்திவிட்டது என்பது வேறு விடயம்.

இன்றைய இலங்கையில் அவலங்களுக்கு தென்பகுதி இனவாத ஊடகங்களும், பேரினவாதிகளுக்கும், அவர்களின் அரசியல தலைமைகளுக்கும் தாளம்போட்டு அவர்களின் தேச நலன்களுக்கு விரோதமான, தனிப்பட்ட அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்றவகையில் செய்திகளை, கருத்துக்களை வெளியிட்ட ஊடகவியல் கருத்தியலாளர்களும் முக்கிய காரணிகளாவர்.

இன்று போர் ஓய்ந்து, சமாதானம் நிலவும் சூழலிலும் தென்பகுதி ஊடகவியலாளர்கள் வந்து போகின்றனர். முன்னர் போன்று இராணுவ அனுசரணையின்றி சுயாதீனமாகவே வந்து போகின்றனர். உண்மைகளை, தமிழ் மக்களின் உணர்வுகளை நேருக்கு நேர் பார்த்து அறிந்து கொள்ளக்கூடிய சூழல் இப்போது நிலவுகிறது. இரண்டாண்டுக்கும் அதிககால அமைதிச்சூழல் அவர்களுக்கு அந்த அருமையான வாய்ப்பினை வழங்கியுள்ளது.

கடந்த வாரம் இங்கு வருகைதந்த ஊடகவியலாளர்களுக்கு இன்றைய நெருக்கடிச்சூழலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே இருந்தது எனலாம்.

அதே சமயம் அவர்கள் பல்வேறு தரப்பினருடனும் நேரில் உரையாடவும், கருத்துப் பரிமாறவும் கிடைத்த வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்தியிருப்பார்கள் என்றே கருதவேண்டும். இது கடந்தகால அவர்களின் வரையறுக்கப்பட்ட எல்லைகள் மற்றும் அழுத்தங்களுக்குட்பட்ட கருத்தியல் நிலைப்பாடுகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு தேசிய மற்றும் சமூகப் பொறுப்புடன் சிந்தித்து தென்பகுதி மக்களுக்கு வடபகுதி மக்களின் நிலைமையை, ஆட்சியாளரின் நேர்மையீனத்தை, படைத்தரப்பினால் குடாநாட்டு மக்களின் மண் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அவலத்தை, விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை உணர்த்த வேண்டிய கடப்பாட்டை அவர்கள் மீது சுமத்தியுள்ளது.

அவர்களுடன் பேசும்போது உண்மையில் தமிழ் மக்களோ, தமிழீழ விடுதலைப்புலிகளோ, விடுதைப்புலிகள் இயக்கத்தின் தேசியத் தலைவரோ சிங்கள மக்களுக்கோ, சிங்கள தேசத்துக்கோ விரோதமான அல்லது எதிரான போக்கைக் கொண்டவர்கள் அல்ல என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் கூறிய செய்தியை தென்பகுதி மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டிய பொறுப்பு அவர்களுக்கே உரியது.

பேரினவாதிகளின் பொய்ப் பிரசாரங்கள், சிங்கள மக்களுக்கு தமிழ் மக்கள் தொடர்பாக, தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக ஏற்படுத்தியுள்ள பொய்யானதும், பீதியூட்டும் தன்மை கொண்டதுமான கருத்தியல் திணிப்புக்களிலிருந்தும் விலகி அவர்கள் தம்மை தெளிவுள்ளவர்களாக மாற்றிக் கொள்ள இந்தத் தென்பகுதி ஊடகவியலாளர்கள் தீவிரம் காட்டுவார்களாயின் அவர்கள் ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிய பெருமைக்குரியவர்களாவர்.

# நாடும் நடப்பும்




# சமாதான சமிக்ஞைகள் திருப்தியில்லாமையால் கூட்டுறவுத்துறையை அபிவிருத்திசெய்ய முடியவில்லை

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமாதான சமிக்ஞைகளில் திருப்தி இல்லாததால் கூட்டுறத் துறையை சிறப்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்றையதினம் தெல்லிப் பழை ப.நோ.கூ.சங்கத்தில் 82 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா நடைபெற்றபோது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - கூட்டுறவு என்பது மக்கள் மயப்படுத்தப்பட்டதாகும், மக்களுடன் இணைந்த ஒன்றாகும், கூட்டுறவுச் சங்கங்களில் மக்கள் அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றனர். கடந்த போராட்ட காலத்தின்போது கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் அழிவுகளை எதிர்நோக்கியிருந்தன. இந்த அழிவென்பது பொதுமக்களுக்கு ஏறபட்ட அழிவேயாகும்.

கூட்டுறவு இயக்கம் தன்னை முழுமையாக வளர்த்துக் கொள்ளவேண்டும் என நினைக்கின்றபோதும் இதுவரை சமாதான சமிக்ஞைகள் எதுவும் கிடைக்கவில்லை.

சகல மட்டத்திலும் கூட்டுறவு அவசியமானதொன்றாகவே காணப்படுகின்றது. யாழ்.குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றன. அந்த வகையில் தெல்லிப்பழை ப.நோ.கூசங்கம் அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தச் சங்கம் கடந்த யுத்த அனர்த்தத்தின் காரணமாகப் பல சொத்துக்களின் அழிவை எதிர்நோக்கிய நிலையிலும், மீண்டும் தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ்வாறு மக்களுக்காகக் கடுமையாக உழைத்தவர்களை நாம் பாராட்டியே ஆக வேண்டும். மக்கள் கூட்டுறவுச் சங்கங்களுடன் இரண்டறக் கலந்து செயற்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

# வடமராட்சி கடற்பரப்பில் தொடர்ந்து இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## வளங்கள் அழிவதாக மீனவர்கள் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி மீன பிடித்து வருவதாக மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மாலைவேளைகளில் கூட்டாகவரும் ரோலர்கள், வடமராட்சிக் கடற்பரப்பினுள் அத்துமீறி நங்கூரமிட்டு மீன்பிடித்து வருகின்றனர்.

அத்துடன் கடறறொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களை கரைக்குத் திரும்புமாறு இந்திய மீனவர்கள் அச்சுறுத்தி வருவதுடன், வலைகளையும் அறுத்துச் செல்கின்றனர்.

இதனால், வடமராட்சி மீனவர்கள் தொழிலில் ஈடுபடமுடியாது கரைக்குத் திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தினமும் நூற் றுக்கணக்கான மீன்பிடி றோலர்களில்வரும் மீனவர்கள் சில தினங்கள் தங்கியிருந்து மீன்பிடித்து வருவதனால் மீனினங்கள் அருகிவரும் நிலையிலுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித் துள்ளனர். (14)

## திலீபனின் நினைவுதினத்தையொட்டி மாணவரிடையே இலக்கியப்போட்டி

(சாவகச்சேரி)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தென்மராட்சி கல்வி வலய மாணவர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் வியாழக் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 6, 7, 8, மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியும், தரம 9,10,11 மாணவர்களுக்கு கவிதைப் போட்டியும் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாள வ.செல்வராசா தெரிவித்தார்.

இநதப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு திலபனின் நினைவு நாள் இறுதி நிகழ்வில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (29)

## இறைச்சி விற்பனைசெய்ய தென்மராட்சியில் அனுமதி!

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதிகளில் மாட்டிறைச்சி விற்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை சுகாதாரப்பிரிவினர் நீக்கியுள்ளனர். மாடுகளுக்குக் கால்வாய் நோய் பரவிவருவதையடுத்து, மாடு இறைச்சிக்காக வெட்டப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மாட்டிறைச்சி விற்பனைசெய்யும் வர்த்தக நிலையங்கள் சீல் வைக்கப்பட்டன.

தற்போது கால்வாய் நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்ததையடுத்து இறைச்சி வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (29)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பு மருந்து

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் தடுப்பு மருந்து இன்றுமுதல் மூன்று தினங்கள் ஏற்றப்படவுள்ளன. காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கச்சாய் லிகோரியாள் தேவாலயத்திலும், நாளை காலை 9 மணிமுதல் 12 மணிவரை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திலும், நாளை மறுதினம் காலை 10.30 மணிமுதல் 12 மணிவரை கெருடாவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையததிலும் பிற்பகல 12 மணிமுதல் 2 மணிவரை ஏற்றப்படவுள்ளன.

மேற்படி இடங்களில் வசித்து வருபவர்கள் அந்தந்த இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பு மருந்தினை ஏற்றுமாறு சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (29)

## மருதங்கேணிப் பகுதியில் புதிதாக இரு கட்டிடங்கள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக் குழுவினரால் ஏழு இலட்சம் ரூபா செலவில் இரு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன்.

மருதங்கேணி வாரிவட்டன் வீதியில் அமைந்துள்ள இரு கட்டடங்களிலும் கணினிப்பயிற்சி நிலையம், ஆடைகள் தைத்தல், தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் நிலையமும் அமையவிருப்பதாக வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (21)

**சர்வதேச அரசியல்**

கே.ரி. கணேசலிங்கம்

# அமெரிக்க ஜனநாயகத்தை பகிரங்கப்படுத்தும் ரஷ்ய ஆட்சியாளர்கள்!

**ஜனநாயகம் என்ற சொற்பதம் எவ்வளவுக்கு ஏமாற்றமான விடயம் என்பதை ரஷ்ய மக்களே அதிக அனுபவிப்பவர்களாக உள்ளனர். அவ்வாறு ஜனநாயகம் என்பது இலகுவான, சாத்தியமான உடுருவலை நிகழ்த்த கூடியதாக உள்ளதென்பதையும் காணமுடியும். ஜனநாயகத்தை ஒரு சமூகம் தனக்குள் ஏற்படுத்தாதபோது, பிற ஆதிக்க சமூகங்களால் புகுத்தப்படும் நிலை ஏற்படுமாயின், அதனைவிட ஆபத்தான அபாயமான அரசியல் நிகழ்வு வேறு எங்கும் ஏற்படாது.**

சர்வதேச அரசியலின் மையங்கள் அடிக்கடி இடம்மாறுவதுண்டு. ஆனால், சில காலங்களில் பல திசைகளில் அதன் போக்குகள் தெளிவாக தென்படாது திணறடிக்கப்படும். இதனால், ஆட்சியாளர்கள் மட்டுமல்ல இராஜதந்திரிகளும் குழம்பிப் போய்விடுவார். அந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்படும் முடிவுகள் முன்னுக்கு பின் முரண்படான விளைவுகளை ஏற்படுத்தி விடுவது வழக்கம். இதனால், சர்வதேச அரசியலை நேரிய திசைக்குள் கொண்டுவருவதே முடிவுகளையும், தீர்வுகளையும் சரிவர மேற்கொள்ள உதவும். அந்த வகையில் ரஷ்ய - அமெரிக்க உறவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுவரும் ஒரு முறுகல் போக்கையும் அதற்கான காரணங்களையும் அதனால், ஏற்படப்போகும் விளைவுகளையும் பரிசீலிப்போம்.

ஆட்சியாளர்கள் எடுக்கும் சில முடிவுகள் அல்லது தீர்வுத்திட்டங்கள் முழு உலகத்திற்குமாக அல்ல என்பதை காட்டும் ஏற்பாடுகளும் முழு உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சியாளர்களையும் சமகாலத்தில் பார்க்க முடியும். ஆனால், இதில் ரஷ்யர்கள் வல்லாதிக்க சக்திகளாக விளங்கிய தனித்துவமான பங்குகளை அடியொற்றியே செயல்படுகின்றனர் என்ற பார்வை அமெரிக்க ஆட்சியாளருக்கு உண்டு. மிக அண்மைக் காலங்களில் ரஷ்யர்கள் பொருளாதார உற்பத்தியிலும், வர்த்தகத்திலும் முன்னேறுவதனால், அமெரிக்கர்கள் உலகத்தைப் பார்ப்பது போலவே ரஷ்யர்களை பார்க்கின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எவ்வளவு தான் அமெரிக்கர் பக்கம் இருந்தாலும், அமெரிக்க ஆட்சியாளர்கள் சந்தேகமாக நோக்குவதுடன், மிக மோசமான நெருக்கடிகளை ரஷ்யர்களுக்கு ஏற்படுத்துவதிலேயே குறியாயுள்ளனர். இத்தகைய நெருக்கடியிலிருந்து ரஷ்யர்கள் மீட்சியடைய ஜனாதிபதி புட்டின் சில வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளார். இதனை நெருக்கடிகளுக்குள் முறியடிக்க முடியாத அமெரிக்க ஜனாதிபதி சர்வதேச ஜனநாயகப் பகிரங்கப்படுத்தலூடாக சாதிக்கலாமென செயற்படத் தொடங்கியுள்ளார். சர்வதேச ஜனநாயகப்படுத்தல் என்பது அமெரிக்க ஜனநாயகப்படுத்தலே அன்றி வேறு எதனையும் விளக்கமாககொள்ள முடியாது.

அந்த அமெரிக்க ஜனநாயகப்படுத்தல் முழு உலகத்திலும் பரப்பப்பட்டு வருகின்றது. இதனை ரஷ்யாவில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அமுலாக்கி வருகின்றது. அமெரிக்கா- அமெரிக்காவின் அத்தகைய நடவடிக்கைக்கு ஒரு பின்னடைவே தற்போதைய அமெரிக்க - ரஷ்ய உறவின் விரிசலுக்கு காரணம். அதனை விபரமாக பார்ப்போம்.

அண்மையில் ரஷ்யாவின் பாடசாலை ஒன்றில் நிகழ்ந்த சம்பவம், செச்சினிய தீவிரவாதத்தின் மிக மோசமான படுகொலைக்கு ஒப்பான நடவடிக்கையாகும். அதனை முறியடிக்கவும், பயங்கரவாதம் எனக்கருதும் விடயத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், ரஷ்ய ஜனாதிபதி பல 'முடிவுகளை முன்வைத்து செயற்பட ஆரம்பித்துள்ளார். ஒருவகையில் கூறுவதாயின் -அமெரிக்காவின் 21ஆம் நூற்றாண்டின் சிந்தனையான பயங்கரவாதத்தை அமெரிக்காவின் பாணியில் ரஷ்யா முறியடிக்க திட்டமிட்டுள்ளது. அவ்வாறு முறியடிப்புக்கு மிக முக்கியமான விடயமாக விளங்கிய பாதுகாப்பு பலப்படுத்துகை என்பது ரஷ்யாவுக்கு இரண்டாவது பட்சமான காரணியாகவே உள்ளது. அதற்கு முதலாவதாக விளங்கிய அம்சம் அளவுக்கதிகமான ஜனநாயகப் போக்குக்கு நிகரான மாற்றுச்சிந்தனையொன்றின் அவசியமாகும்.

அதாவது பிறநாடுகளிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட ஜனநாயகக் கோட்பாட்டை விடுத்து யதார்த்தமாகவும், ரஷ்யாவின் பாதுகாப்புக்கும் பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்தான பாதுகாப்புக்கும் வேண்டிய ஜனநாயகம் என்ற ரஷ்யச் சிந்தனையாகும். இது சர்வதேச (அமெரிக்க) ஜனநாயகச் சிந்தனைக்கு முரணானதாகவும் கொள்ளலாம். அவ்வாறே அமெரிக்கா ரஷ்யாவின் போக்கை கருதுகிறது.

ரஷ்ய அதிபர் புட்டின் ரஷ்யப் பிராந்திய ஆளுநர்களுக்கு நேரடியாக தேர்தல் நடத்தும் நடைமுறையை ரத்துச்செய்ய, முடிவு செய்தமையே அவரது நடவடிக்கையாக அமைந்தது. இதனையே அமெரிக்க வெள்ளைமாளிகை முதல் அமெரிக்க வெளிவிவகார செயலாளர்வரை விமர்சிக்கப்பட்டதாகும். ரஷ்ய அதிபர் புட்டினின் நடவடிக்கையால் ரஷ்யாவின் ஜனநாயகச் சீர்திருத்தங்கள் பாதிப்படையும்.



இது தொடர்பாக அமெரிக்கா கவலையடைவதாக கொலின் பவல் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஸிலோவ் ரோவ் - ரஷ்யாவில் நடந்து கொண்டிருப்பது உள்நாட்டு விவகாரம். முதலில் இதில் தலையிட அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் கிடையாது. தனது நாட்டின் ஜனநாக மாதிரியை ரஷ்யா உள்ளிட்ட எந்த நாட்டின் மீதும் திணிக்கும் அதிகாரம் அமெரிக்காவுக்கு கிடையாது. அமெரிக்காவின் செயற்பாடுகளில் ரஷ்யா தலையிடுவதில்லை. அந்த நாட்டு அதிபர் தேர்தல் நடைமுறையை நாங்கள் விமர்சிக்கவில்லையே என்றார்.

இது பனிப்போர் காலத்து உரையாடல் போன்றே காணப்படுகின்றது. புட்டினின் பிராந்திய ஆளுநரை ஜனாதிபதியே தேர்ந்தெடுப்பார் என்ற உள்நாட்டு செயற்பாட்டுக்கு ஏன் அமெரிக்கா இவ்வளவு காட்டமான கண்டனம் வெளியிட்டது. அதனை விரிவாக பார்ப்போம்.

யதார்த்தமாக புட்டின் செய்திருக்கும் வேலை ரஷ்யப் பிராந்திய ஆளுநர்களை ஜனாதிபதிக்கும், ரஷ்ய தேசத்துக்கும் பக்கபலமானவர்களாக தேர்தெடுக்கும் நடைமுறையாகும். மேலும், ஜனாதிபதிக்கு விசுவாசமானவர்களாக மாற்றுவதென்பதாகும். எனவே, ரஷ்யாவையும், ஜனாதிபதியையும் நிராகரிக்கும் எவரும் ஆளுநராக அமரமுடியாது. அதனால், ஏற்படப்போவதெல்லாம் ரஷ்யாவையும், ஜனாதிபதியையும் மையப்படுத்தி அலகுகள் தொழில்படுவதோடு, ரஷ்யாவிலிருந்து செச்சினியாவைப் பிரித்ததுபோல், ஏனைய பிராந்தியங்களை பிரிக்க முடியாதென்பதாகும். அதனுடன், ரஷ்யக் குடியரசு சட்டரீதியாக பாதுகாப்புப்படை வலுவடைவதுடன், ரஷ்யாவின் பலம் மேலும் அதிகரிக்கும். இத்தகைய நெருக்கத்தையும் பலத்தையும் அடிப்படையாகக்கொண்டு ரஷ்யாவின் பாதுகாப்பு மட்டுமல்லாது ரஷ்யப் பிராந்தியத்தின் பாதுகாப்புமே பலமடையும். அதில் ரஷ்யா பலமான சக்தியாக அமைவதுடன், தனது பழைய குடியரசுகளோடு, நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தும். அது படிப்படியாக விரிவ்டைந்து இறுதியில் அமெரிக்கச் செல்வாக்கு அருகிவதுடன் ரஷ்யாவின் குடியரசுகள் ரஷ்யாவுடனான உறவை பலப்படுத்தி பலமான சக்தியாக மாறிவிடும்.

இதில் இரண்டு அனுபவங்கள் கடந்த காலத்தில் சாத்தியமான வாய்ப்பை ரஷ்யாவுக்கு கொடுத்துள்ளது. ஒன்று ஐரோப்பிய யூனியனின் பொருளாதார ஒருமைப்பாடும், ஐக்கியமும் ரஷ்யாவை மட்டுமல்ல ரஷ்யப் பிராந்தியத்தையே உலகம் போன்று பாதித்துள்ளது. அதுமட்டுமல்லாது ரஷ் யாவின் பழைய குடியரசுகளை முதன்மைப் படுத்தும் ஐரோப்பிய யூனியன் நேட்டோ அமைப்பு என்பன போன்றன வளர்ச்சியை நோக்கிய மற்றத்துக்கு இந்தக் குடியரசுகளை அனுமதிப்பதில்லை. இதனால், இந்த நாடுகளது பங்களிப்பு மட்டுமே கோரப் படுவதுடன் தங்கிவாழும் பொருளாதார பொறி முறையை முழு மேற்கு நாடும் பிரயோ கித்துவருகின்றது. பொருளாதாரத்தில் இந்த நாடுகளின் மீதான மேற்குலகின் அழுத்தங்கள் தன்னிறைவுக்கான எந்த ஒரு உற்பத்தியையும் மேற்கு சாத்தியப்படுத்த அனுமதிக்கவில்லை.

இரண்டாவது ரஷ்யா - கஜகஸ்தானுடன் செய்து கொண்ட அண்மைக்கால உடன்பாட்டில் - எண்ணெய் வளத்தை பகிர்வதுடன், குழாய் மூலமான எண்ணெய்ப் பரிமாற்றத்திற்கு உதவுவதாக முடிவெடுத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் பூரணகட்டுப்பாட்டுடன் அவ்வெண்ணெய்ப் பரிமாற்றத்தை மேற்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. முன்னால் ரஷ்யக் குடியரசுகள் பயங்கரவாதத்தினை எவ்வாறு எதி[illegible]கொள்வதென்ற ரஷ்யா தலைமையி லான மாநாட்டை புட்டின் கஸகஸ்தான் தலைநகரிலேயே கூட்டியுள்ளார். இதற்கு இந்தப் பிராந்திய நாடுகளிடம் அதிக ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதாக தெரியவருகின்றது.

இவையாவற்றையுமே அமெரிக்கா கண்டு அச்சப்படுகின்றது. எதிர்காலத்தில் ரஷ் யா பலமடைந்துவிடக் கூடாதென கருது கின்ற அமெரிக்கா- ஜனநாயகம், மனித உரிமை, பயங்கரவாதமெனக் கூறிக்கொண்டு ரஷ்யா ஒரு வறியநாடாகவும் - அமெரிக்க கூட்டாளி களின் தயவில் வாழும் நாடாகவும் இருத்தல் வேண்டுமென கருதுகின்றது. நீண்ட காலத் தில் புட்டினின் நடவடிக்கை அடுத்துவரும் ஜனாதிபதிகளின் அதிகாரத்தைபலப் படுத்து வதுடன் ரஷ்யாவின் ஐக்கியத்துக்காக உழைக்க வாய்ப்பை உருவாக்கிவிடுமென்றுமே அமெரிக்கா அச்சமடைகின்றது. ரஷ்யப் பிராந்தியங்களை நோக்கிய புட்டினின் நகர்வு முழுமையாக ரஷ்யக் குடியரசுகளை நோக்கி விஸ்தரிக்கப்பட்டுவிடுமா? என்பதே அமெரிக்காவின் அடுத்த கேள்வியாகும்.

இவ்வகையான கேள்விக்கு மறுவளமாக அமெரிக்காவே கூறும் பதில் தான் - ஜனநாயக அபிவிருத்தியாகும். 1989ஆம் ஆண்டுக்குப் பின்பு அமெரிக்கா ரஷ்யாவில் ஏற்படுத்த விரும்புகின்ற, ஏற்படுத்திய அம்சம் ஜனநாயகம் என்பதேயாகும். அவ்வாறு கடந்த 14 ஆண்டுகள் ரஷ்யாவில் ஜனநாயக அபிவிருத்தியை யதார்த்தமாக அமெரிக்கா சாத்தியப்படுத்தியதா? என்பது ரஷ்ய ஆட்சியாளரினதும், ஆய்வாளரினதும் கேள்வியாகும்.

உண்மையில் ஜனநாயகத்தின் பெயரால் ரஷ்யாவின் தன்னாதிக்க வலு சிதைக்கப்பட்டதென்பதே காணக்கூடிய விடயமாகவுள்ளது. ரஷ்ய மக்கள் பசியாலும், வறுமையாலும், முரண்பாடுகளாலும் மோதுண்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் அழிவுக்கும், சிதைவுக்கும் யார் காரணம் என்பதுகூடி புலப்படாத மக்களாக அவர்கள் விளங்குகின்றனர். உலகத்தை ஆட்டிப்படைத்த ரஷ்யர்கள் அதே உலகத்துக்கு அடிமைகளாகிக் கொண்டிருகிறார்கள். தங்கள் பண்பாடுகளை, விழுமியங்களையும், பிறருக்காக இழந்து கொண்டிருக்கும் துயரத்தை காணமுடிகின்றது.

இவையாவற்றையும் கட்டம்கட்டமாக முறியடித்துவரும் விளாடிமிர் புட்டின் சற்று வலுவான ரஷ்யாவைக் கட்டி வளர்க்க திட்டமிடுகிறார். அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத அமெரி க்கா- பகிரங்கமாகவே புட்டினையும், ரஷ்சியாவையும் விமர்சிக்க ஆரம்பித்துவிட்டது. இதனை மறைமுகமாக பல திட்டங்களுக்கு ஊடாக மேற்கொண்டுவந்த அமெரிக்கா, வெளிப்படையாக செயல்பட ஆரம்பித்தமை ரஷ்சியாவின் நடவடிக்கையில் அதீதமான தன்மையை காட்டுகின்றது.

அமெரிக்காவின் அச்சத்திற்கு நியாயப்பாடும் இல்லாமல் இல்லை. ரஷ்யப் பிராந்தியத்தின் புவிசார் அரசியல் போக்குகளும் அதனையே உணர்த்துகின்றதை கடந்த காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

ஜனநாயகம் என்ற சொற்பதம் எவ்வளவுக்கு ஏமாற்றமான விடயம் என்பதை ரஷ்ய மக்களே அதிக அனுபவிப்பவர்களாக உள்ளனர். அவ்வாறு ஜனநாயகம் என்பது இலகுவான, சாத்தியமான உடுருவலை நிகழ்த்த கூடியதாக உள்ளதென்பதையும் காணமுடியும். ஜனநாயகத்தை ஒரு சமூகம் தனக்குள் ஏற்படுத்தாதபோது, பிற ஆதிக்க சமூகங்களால் புகுத்தப்படும் நிலை ஏற்படுமாயின், அதனைவிட ஆபத்தான அபாயமான அரசியல் நிகழ்வு வேறு எங்கும் ஏற்படாது.

ஒரு சமூகம் தன்னை பாதுகாத்துக்கொள்வதும், நியாயப்பாட்டை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், யதார்த்தமான ஜனநாயக அபிவிருத்தி அவசியமானது. அதுவேறு நாடுகளின் திணிப்புக்களால் ஏற்படுவதல்ல. முறையான வளர்ச்சியூடாக மாற்றத்தை உள்வாங்கி, அச்சமூகமே தயாரிக்கின்ற முன்மாதிரியான அடைவே ஜனநாயகத்தின் சிறப்பாகும். எனவே வறிய நாடுகள் மீது மேற்கு நாடுகள் திணிக்கும் சர்வதேச ஜனநாயகம் என்பது ஊடுருவலுக்கும் அரசியல் அபாயங்களை ஏற்படுத்துவதற்குமான நடவடிக்கையாக மட்டுமே அமையும்.

எனவே, அமெரிக்கர்களை உலகப் போட்டியில் எதிர்கொள்ளமுடியாது ரஷ்யர்கள் - அமெரிக்காவுடன் முரண்டு பிடித்தும் உலகத்தில் எந்த மாறுதலையும் தற்போதைக்கு ஏற்படுத்த முடியாதவர்களாக உள்ளனர். ஆனால், அவர்கள் ரஷ்யாவையும் தமது குடியரசுகளையும் ஒன்றிணைப்பதிலும், பாதுகாப்பதிலும் வெற்றியடைவார்களாயின் எதிர்காலத்தில் அதிக எல்லைகளை அடைபவர்களாக விளங்குவார்கள். அமெரிக்காவுடன் ஏற்படுத்திக்கொண்ட நெருக்கத்தை விட சவால்விடும் செயல்பாடு ரஷ்யா வையும் அதன் கருத்துருவாக்கத்தையும் பிரபலப்படுத்தியுள்ளதுடன், அமெரிக்க தலைமையை கேள்விக்குள்ளாக்கும் நாடுகளை வலுப்படுத்துவதாக அமையும்.

□□□

### பாகிஸ்தானுடன் தோற்றதன் மூலம்

# மினி உலகக் கிண்ண தொடரிலிருந்து இந்திய அணியும் வெளியேறியது!



(லண்டன்)

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணத் தொடரில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் மிகவும் பரபரப்பான முறையில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் மூன்று விக்கெட்டுக்களால் இந்தியாவைத் தோற்கடித்தது. இதனால் இந்திய அணி மினி உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் தலைவர், இந்திய அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். இதன்படி இந்திய அணி சார்பில் கங்கூலி மற்றும் ஷேவாக் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.

ஆனாலும், இந்திய அணிக்கு ஆரம்பமே நன்றாக அமையவில்லை. அந்த அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றிருக்கையில் கங்கூலி 5 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தார். இதன்பின் லக்ஷ்மன் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் ஷேவாக், கைவ் ஜோடி இணைந்திருந்த போதும், அணி 28 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஷேவாக் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் கைவுடன் இணைந்தவர் ராவிட். இவர்கள் சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் கைவ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து யுவராஜ் வந்தார். அவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்து திரும்பினார். இறுதியில் இந்திய அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ராவிட் 67, அகர்கர் 47, கைவ் 27 ஓட்டங்களைக் குறிப்பிடும்படியாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நவீட் உல் - ஹசன் மற்றும் அக்தர் இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்களையும், சமி, ரசாக் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணியும், இந்திய அணி எவ்வாறு ஆரம்பம் முதல் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்ததோ அதுபோலவே அந்த அணியும் விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும், யுகானா இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தும், இன்ஸமாம், அப்ரிடியின் துணையுடன் பாகிஸ்தான் அணி 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை எடுத்து வெற்றியைத் தனதாக்கியது.

இந்த அணி சார்பில் இறுதிவரை ஆட்டமிழக்காத யுகானா 81, இன்ஸமாம் 41 (இவர் நேற்றைய போட்டியில் 10 000 ஓட்டங்களைக் கடந்தமை குறிப்பிடத்தக்கது), அப்ரிடி 12 பந்துகளில் 2 சிக்ஸர் 1 பவுண்டரி அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்றனர்.



பந்து வீச்சில் பதான் 3, நெஹ்ரா, அகர்கர், ஷேவாக் மற்றும் யுவராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். நேற்றைய ஆட்டத்தில் ஆட்ட நாயகனாக யுகானா தெரிவானார்.



கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் 'உடல் ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக்ஸ்' எனப்படும் பாராலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. ஒலிம்பிக் போட்டிகளுக்கு நிகராக நடத்தப்படும் இந்தத் தொடரில் தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் கொண்டு 136 நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பற்கேற்கின்றனர். தொடக்க விழா அணிவகுப்பின் போது, துர்க்மெனிஸ்தான் நாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவர் கைகளால் நடந்து பார்வையாளர்களை அசத்தினார்.

## ஊனமுற்றோர் ஒலிம்பிக் - 2004 பதக்கப் பட்டியல்

ஏதென்ஸ் நகரில் நடைபெற்றுவரும் ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற நாடுகள் விபரம் :

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஹொங்கொங் | 3 | 2 | 0 | 5 |
| ஜேமன் | 2 | 1 | 1 | 4 |
| பிரிட்டன் | 2 | 0 | 0 | 2 |
| சீனா | 1 | 1 | 2 | 4 |
| பிரான்ஸ் | 1 | 1 | 0 | 2 |
| கியூபா | 1 | 0 | 0 | 1 |
| தாய்லாந்து | 1 | 0 | 0 | 1 |
| அவுஸ்ரேலியா | 0 | 1 | 0 | 1 |
| போலந்து | 0 | 1 | 2 | 3 |
| கொறியா | 0 | 1 | 0 | 1 |
| மெகடோனியா | 0 | 1 | 0 | 1 |
| ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| பிறேசில் | 0 | 1 | 0 | 1 |




# மினி உலகக் கிண்ண தொடரிலிருந்து தென்னாபிரிக்காவும் வெளியேறியது



நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணத் தொடரில், நேற்று பிறிட்ஓவல் மைதானத்தில் மேற்கிந்தியத்தீவுகள் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களால் யாரும் எதிர்பாராத வகையில் தென்னாபிரிக்க அணியைத் தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் இரு அணிகளுக்குமிடையில் ஆட்டம் நடந்தது. இதில் முதலில் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடி 6 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக் கொடுத்தது. இந்த அணி சார்பாக ஸ்மித் 45, கிப்ஸ் 101, றுடோல்ப் 46, பொலக், குளுஸ்னர் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 13, 12 ஓட்டங்களைப் பெற்றனர்.



பந்துவீச்சில் கைல் 3, பிராட்சோ 2, பிராவோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர், மேற்கிந்தியத்தீவுகள் அணி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருக்கையில் - 6 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 20 ஓட்டங்களை அந்த அணி எடுத்திருக்கையில், மழை குறுக்கிட்டது. இதனால், மேலும் ஆட்டத்தைத் தொடரமுடியாத நிலையில் நேற்றுமுன்தினம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று மீளவும் ஆட்டம் ஆரம்பித்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும், சொற்ப ஓட்டங்களுக்குள் பொலக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

ஆனாலும், அடுத்துவந்த வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால், மேற்கிந்தியத் தீவுகள் 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக - கைல் 16, ஹின்ட்ஸ் 15, சர்வான் 75, லாரா 49, சந்திரபோல் ஆட்டமிழக்காமல் 51, பவல் 16 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு உறுதியான பங்களிப்புச் செய்தனர்.

நேற்றைய போட்டியில் தென்னாபிரிக்க அணி சார்பில் 23 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தனர். இதுவே அவர்களது தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் பொலக் மற்றும் என்ரினி இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், போஜி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# இங்கிலாந்து அரையிறுதிக்கு தகுதி; இலங்கை அணி வெளியேறியது!



(சவுதம்டன்)

மழையால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில், டக்வேர்த் லூவிஸ் முறைப்படி இங்கிலாந்து அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. கடந்த முறை இணைச் சம்பியனான இலங்கை அணி இந்தத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 'டி' பிரிவு கடைசி 'லீக்' ஆட்டத்தில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதின.

சவுதம்டன் நகரிலுள்ள ரோஸ்பவுல் மைதானத்தில் கடந்த வெள்ளியன்று நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி கப்டன் அத்தபத்து இங்கிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 32 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அப்போது டிரெஸ்கோதிக் 64 ஓட்டங்களுடனும், பிளின்டொப் 21 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மழையால் பாதிக்கப்பட்ட ஆட்டம் நேற்றுமுன்தினம் தொடர்ந்தது.

இங்கிலாந்து அணி தொடர்ந்து ஆடியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மேலும் 2 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் டிரெஸ்கோதிக் 66 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கொலிங்வுட், பிளின்டொப்புடன் இணைந்தார். இந்த ஜோடி இலங்கை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் விளாசித்தள்ளியது. பிளின்டொப்பின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அவர் இலங்கை அணியின் பந்து வீச்சை சுலபமாக எதிர்கொண்டார்.

47.5 ஓவர்களில் அணியின் மொத்த ஓட்டங்கள் 217 ஓட்டங்களாக உயர்ந்தபோது கொலிங்வுட், சமிந்த வாஸ் பந்தில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 49 பந்துகளில் 3 பவுண்டரியுடன் 39 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து ஜோன்ஸ் களம் இறங்கினார்.

மறுமுனையில் அபாரமாக ஆடிய பிளின்டொப் சதம் அடித்தார். அவர் 89 பந்துகளில் 8 பவுண்டரி, 3 சிக்ஸருடன் சதத்தைக் கடந்தார்.

49.4 ஓவர்களில் மொத்த ஓட்டங்கள் 250 ஆக உயர்ந்தபோது - பிளின்டொப், வாஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். பிளின்டொப் 91 பந்துகளில் 9 பவுண்டரி, 3 சிக்சருடன் 104 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து வோர்ப் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களை எடுத்தது. ஜோன்ஸ் 2 ஓட்டங்களுடனும், ஜைல்ஸ் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இலங்கை அணி தரப்பில் வாஸ் 2 விக்கெட்டையும், சொய்சா, ம.்.ரூப் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 252 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி துடுப்பெடுத்தாட, தொடக்க ஆட்டக்காரர்களாக குணவர்த்தனவும், ஜெயசூர்யாவும் களமிறங்கினர்.



ஹர்மிசன், பிளின்டொப் பந்து வீச்சில் விக்கெட்டுக்கள் வேகமாக சரிந்தன. குணவர்த்தன 5, அத்தப்பத்து 1, ஜெயசூர்யா 27, ஜெயந்த 23, ஜெயவர்த்தன 7 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

24 ஓவர்களில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்கள் எடுத்து தள்ளாடிக்கொண்டிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. நீண்ட நேரம் மழை தொடர்ந்ததால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. சங்ககரா 17 ஓட்டங்களுடனும், தில்ஷான் 2 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க டக் வேர்த் லூவிஸ் முறை கடைப்பிடிக்கப்பட்டது. 104 ஓட்டங்கள் மற்றும் 2 விக்கெட் எடுத்த பிளின்டொப் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி அரை இறுதிக்கு தகுதி பெற்றது. இலங்கை வெளியேறியது. நாளை எட்ஜ் பாஸ்டனில் நடைபெறும் முதல் அரை இறுதிப் போட்டியில் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த அவுஸ்ரேலியாவும், 'டி' பிரிவில் முதலிடம் பெற்ற இங்கிலாந்தும் மோதவுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## சம்பள உயர்வு கோரி

# நிதியமைச்சருடன் இன்று தொழிற்சங்கங்கள் சந்திப்பு!

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக 15 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய பொதுத்துறை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இன்று நிதி அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது அரசாங்க ஊழியர்களுக்கு 5000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டுமென நிதி அமைச்சரிடம் வலியுறுத்தப்போவதாக பொதுத்துறைத் தொழிற்சங்கக் கூட்டமைப்புகளின் ஆளுநர் பியதாச தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தொழிற்சங்கக் கூட்டமைப்புகளின் ஆளுநர் பியதாச அரசாங்க ஊழியர்களுக்கு 3000 ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொதுச்சேவைகள் நிர்வாக அமைச்சர் ஆகியோருடன் நடாத்திய பேச்சுக்கள் இதுவரையில் வெற்றி அளிக்கவில்லை என்றும், இதே கோரிக்கையினை இன்று நிதி அமைச்சரிடமும் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் தற்பொழுது வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதால் - 5000 ரூபா சம்பள உயர்வை அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் இந்தத் தொகைக்குக் குறைவான சம்பள உயர்வு வழங்கப்பட்டால் அது உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவினை ஈடு செய்யமாட்டாது என்றும் தெரிவித்தா.

இச்சம்பள உயர்வினை ஏற்கனவே 2002 ஆம் ஆண்டில் திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிதி அமைச்சருடனான இந்தச் சந்திப்பு இன்று மாலை 4.00 மணிக்கு கொம்பனித்தெருவில் உள்ள ஜக்பெரேரா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கவேண்டுமென அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கும் முகமாக இம்மாத இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் பின்னர் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி சந்திரிகா நியூயோர்க் பயணம்!

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தின் 59 ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன் தினம் நியூயோர்க் பயணமானார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றவுள்ளாார். இதற்காகவே அவர் நியூயோர்க் சென்றுள்ளரார்.

இதனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பும்வரை- அவர் பதவி வகிக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், பதில் பாடசாலைக் கல்வி அமைச்சராக மங்கள சமரவீரவும், பதில் உயர் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் புனர்வாழ்வு, புனரமைப்பு பதில் அமைச்சராக டி.ஈ. டபிள்யூ.குணசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# திருமலைத் துறைமுகத்தைப் பாதுகாக்க கடற்படையினர் கூடுதலான நடவடிக்கை!

## படையதிகாரிகள் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகத்தை விடுதலைப் புலிகளின் அண்மைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உறுதியான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாம் செய்துள்ளதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கிழக்குப் பகுதி சார்ந்த சர்வதேச கடல் எல்லையைப் பலப்படுத்துவது தொடர்பாக அண்மையில் கொழும்பு வந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷும் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுடன் நட்புறவைப் பேணவே இலங்கை விரும்புகிறது. இதன்மூலம் மற்றைய நாடுகளை விட இந்தியாவிடமிருந்து பெருமளவு உதவிகளை இந்தப் பிராந்தியத்திலிருந்து பெறமுடியும். ஏனெனில், இந்தியா இந்தப் பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசு.

எனவே எமது படைகளுக்கு பயிற்சி மற்றும் இதர வசதிகளை மற்றைய நாடுகளை விட இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாமென சிரேஷ்ட படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இலகு விமானங்களை கைவசம் வைத்துள்ளனர். எனவே, அவர்கள் அவற்றின் மூலம் தாக்குதலை திருமலைத் துறைமுகம் மீது நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லையென்பதை மறுக்கமுடியாது என கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருமலைத் துறைமுகத்துக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் உள்ளதாக அடையாளம் கண்டுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தாம் அறிவித்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமடோர் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

எனவே, திருமலைத் துறைமுகம் தொடர்பான பாதுகாப்பில் சாத்தியமான ஏற்பாடுகளை நாம் எடுத்துள்ளோம். விடுதலைப் புலிகளின் வரலாற்றில் அவர்கள் பொதுமக்களின் பகுதிகளிலுள்ள படையினரின் காவலரண்களையே தாக்கியழித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பலாலி மற்றும் காங்கேசன்துறை படைமுகாம்களை தாக்குவதற்கான நவீனரக ஆயுதங்களை வைத்துள்ளனர். அவர்கள் 130 மில்லிமீற்றர் ஆடலறிகளை வைத்துள்ளனர். ஆனாலும், அவர்களால் இவற்றைத் தாக்கியழிக்க முடியாத வகையில் நாம் படைமுகாம்களை வைத்துள்ளதுடன் விநியோகப் பாதைகளையும் வைத்துள்ளோம் என சிரேஷ்ட படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்த யதார்த்தம் விளங்கும். இதில் காங்கேசன்துறை முகத்தின் வழியை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக அடைப்பார்களாக இருந்தால் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையில் இராணுவச் சமநிலை மாற்றமடையும். எனவே, சமாதானப் பேச்சுவார்த்தையின் அடிப்படையே மாற்றங்காணும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் பயிற்சி!

(கொழும்பு)

அரசாங்க சேவையில் நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்குள் பயிற்சிகள் ஆரம்பமாகுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தகவல் வெளியிடுகையில்,

நிதியமைச்சில் இன்று நடைபெறும் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்படவுள்ளது.

முதற் தொகுதி பட்டதாரிகள் தற்பொழுது பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். பயிற்சிபெறத் தகமை பெறாத பட்டதாரிகள் தமது மேன்முறையீடுகளை தெரிவிக்கமுடியும் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொன்ஸ்டபிளால் சுட்டுக்கொலை!

நீர்கொழும்பு - பமுனுகம பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஷெல்டன் ரொட்ரியோ நேற்று மாலை கடமையிலிருந்த கொன்ஸ்டபிள் ஒருவரால் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் கொன்ஸ்டபிள் எம்.சேனாரத்ன என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ரி-56 ரக துப்பாக்கி இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவரின் தலையிலும் கழுத்திலும் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றிரவு பொரளையில் பாதாள உலக கோஷ்டிகளிடையே ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

| தேசிய லொத்தர் சபை | மஹஜன சம்பத பெறுபேறுகள் |
|---|---|
| சீட்டிழுப்பு இல:- 1649 | திகதி:- 17.09.2004 |
| வெற்றி இலக்கங்கள் | Y 4 3 5 5 4 9 |
| அடுத்த சூப்பர் பரிசு 281 லட்சத்துக்கு மேல் | (927) |

# மாகாண தமிழ்த்தினப் போட்டி யாழ்.மாவட்டம் முதலிடத்தில்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளிடையே கடந்த இரண்டு நாட்களாக திருமலையில் நடைபெற்ற தமிழ் மொழித்தின போட்டி முடிவுகளின் படி, மாவட்ட மட்டத்தில் யாழ். மாவட்டம் 126 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், திருகோணமலை மாவட்டம் 77 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், மட்டக்களப்பு மாவட்டம் 71 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

இவற்றுக்கு அடுத்தபடியாக வவுனியா 60, கல்முனை 59, கிளிநொச்சி 28, முல்லைத்தீவு 23, மன்னார் 14 புள்ளிகளையும் பெற்று அடுத்தடுத்த நிலையில் உள்ளன.

வலயமட்டத்தில் திருமலை வலயம் 71 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், யாழ்ப்பாணத்தில் வலிகாம வலயம் 65 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மட்டக்களப்பு வலயம் 60 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன. (10,04)

# எரிபொருட்களுக்கான மானியத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முழவு!

(கொழும்பு)

டீசலுக்கு வழங்கப்படும் மானியத்தை நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில் - வரலாற்றில் முதல் தடவையாக தற்போதய அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டுவருகின்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக சர்வதேச அமைப்புக்களிடம் முறையிட்டுள்ளது.

உலக நாடாளுமன்றச் சங்கப் பொதுச்செயலாளரிடமும், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் மனித உரிமை குழுவிடமும் நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் பழிவாங்கல் குறித்து முறையிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## தவறிவிட்டது

கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள தளபாடக் கடையொன்றில் தளபாடம் வாங்கிய பின் - அவ்விடத்தில் ரூபா 29,000 ஆயிரத்துடன் (Court Dairy) நீதிமன்ற நாட்குறிப்பேடும் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 256, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கதிர்காமு மாணிக்கம் தில்லைநாதன்
சட்டத்தரணி
(938)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.